பதில்: வேதாத்யயனத்தால்.

10. கேள்வி: அந்தணர்கள் மனிதர்கள் என எதனுல் கருதப்படுகின்றனர்?

பதில்: உடலில் நான் என்ற எண்ணங்கொண்டு, அதனுல் ஜனனத்தையும் மரணத்தையும் அடைவதால்.

11. கேள்வி:—துஷ்ட மனிதர்களுக்கும் இவர்களுக்கும் பொதுவாக இருப்பது எது ?

பதில்: தெய்வத்தையும் பெரியோர்களேயும் நிந்தனே செய்தல், துராசாரம் இவை இருவர்களுக்கும் பொதுவானவை.

(9—10-வது கேள்விகளின் பதில்களே, அதாவது வேதாத்யயனம், சமம், தமம் முதலிய குணங்கள், ஸதாசாரம் இவற்றை, அனேவரும் பின்பற்ற வேண்டும். 10—11-வது கேள்விகளின் பதில்களே, அதாவது, தேஹாத்மபாவம், தெய்வ நிந்தை, பெரியோர்கள் நிந்தை, துராசாரம் முதலியவற்றை அனே வரும் ஒழிக்கவேண்டும் என்பது கருத்து.)

12. கேள்வி :— க்ஷத்திரியர்கள் தேவர்களாக அதாவது சுவர்க்கத்திற்குச் செல்லத் தகுதியுள்ளவர்களாக எதனுல் ஆகின்றனர்?

பதில்: வில்வித்தையை நன்கு அப்யஸித்து அதன்மூலம் பிரஜைகளே இரக்ஷித்தலால்.

13. கேள்வி: ஸத்புருஷர்களுக்கும் இவர்களுக்கும் பொதுவான தர்மம் யாது?

பதில்: யஜ்ஞங்களே அனுஷ்டித்தல்.

14. கேள்வி: க்ஷத்திரியர்கள் மனிதர்கள் என எதனுல் கருதப்படுகின்றனர்?

பதில்: பயத்தால். (வில்வித்தை முதலியவற்றைக் கற்று பிரஜைகளே நன்கு பரிபாலித்து வந்தால் சுவர்க்கத்தை அடைகின்ருன். எதிரிகளேக் கண்டு பயந்து குடிகளேச் சரிவர இரக்ஷிக்கவில்லேயேல் ஜனன மரணங்களே அடைந்துகொண்டே இருக்கின்ருன்என்பதுகருத்து).

15. கேள்வி: துஷ்டர்களுக்கும் இவர்களுக்கும் சமமான தர்மம் யாது?

பதில்: கஷ்டப்படும் பிரஜைகளேத் தியாகம் செய்தலே.


16. கேள்வி: யஜ்ஞத்தில் உபயோகப்படும் 'ஸாம' என்பது என்ன?

பதில்: மனது. (யாகத்திற்கு ஸாம வேதமும், யஜுர் வேதமும் உபயோகப்படுவதுபோல் ஞான யஜ்ஞத்திற்குபிராணன், மனஸ் இவ்விரண்டும் சிறந்த சாதனங்களாம்)

17. கேள்வி: எது யஜ்ஞத்தை நிறைவேற்றுகிறது?

பதில்: ரிக்.

—(தொடரும்)



கீதை காட்டும் பாதை

பிரம்ம வித்தை

தமிழ்வாணன்

கீதையின் சிறப்புக்கு ஆயிரம் காரணங்கள் கூறுவார்கள். ஆனால், அவை எல்லாவற்றிலும் மேலான ஒரு காரணம் உண்டு. அதாவது, மனிதன் ஒவ்வொருவனும் தன் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகக்கூடிய, மேன்மையான கடவுள் தன்மையை அவன் அடைவதற்கு வழிகாட்டக் கூடிய, ஒரே ஒரு தத்துவ நூல் பகவத்கீதையே ஆகும்!

கீதை ஒரு வெறும் வேதாந்த நூல் அல்ல. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கும், நாட்டுக்கும், இனத்துக்கும், மதத்துக்கும், மட்டுமே உரிய ஒரு நூலும் அல்ல. ஒரு மனிதன் எந்தக் காலத்தைச் சேர்ந்தவனாயினும், எந்த நாட்டைச் சேர்ந்தவனாயினும், எந்த இனத்தைச் சேர்ந்தவனாயினும், எந்த மதத்தைச் சேர்ந்தவனாயினும், அவனை இந்த உலகியலின் துன்பங்கள் வந்து தாக்காமல் காப்பாற்றி, இடையறாத இன்பம் நிறைந்த ஓர் உயரிய வாழ்வை அவனுக்கு அளிக்கக் கூடிய ஒப்பற்ற நூல் அது.

இதனால்தான், சாதிசமய வேறுபாடுகள் இன்றி, எல்லாராலும்

ஒருங்கே கிதை பாராட்டப்படு கிறது.

நம் பாரத நாட்டில் வழங்கி வரும் தலையாய தத்துவக் கோட்பாடுகள் மூன்றே மூன்று தான். அவை ஆதி சங்கரரின் அத்துவைதம், இராமானுஜரின் விசிஷ்டாத்துவைதம், மத்துவரின் துவைதம் என்பன. இந்த மூன்று வேதாந்தக் கோட்பாடுகளுக்கும் மூல ஆசிரியர்களான ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகிய மூவரும், பகவத்கீதைக்கு உரைஎழுதியுள்ளார்கள். அதாவது, தமது கோட்பாடுகளுக்குச் சான்று பகவத்கீதையில் இருக்கிறது என்று மெய்ப்பிப்பதற்கு அவர்கள் முயன்றுள்ளார்கள். 'கீதையின் கருத்து இதுதான்!' என்பதாக ஒன்றை மெய்ப்பித்துவிட்டால், அப்புறம் பண்டிதர்களோ பாமரர்களோ அதை மறுக்கத் துணிய மாட்டார்கள், மகிழ்வோடு ஏற்றுக்கொள்வார்கள் என்பதே அதன் பொருள்.

சங்கரர், இராமானுஜர், மத்துவர் மூவரும் ஒருவருக்கொருவர் ஓர் அளவு மாறுபட்ட கொள்கைகளை உடையவர்கள். இந்த மூவரது கொள்கைகளுக்கும் கீதை எப்படி இடம் கொடுக்க முடிந்தது என்ற கேள்வி எழலாம். அதுவே கீதையினது பொருள் ஆழத்தின் சான்று. கீதையை அணுகுபவனது மனப்பண்புக்குத் தக்கபடி, அவனுக்குப் பயனுள்ள வகையில் கீதையின் செய்யுள்களை அவன் பொருள் செய்துகொள்ள முடியும். இதுபோலவே நம் திருக்குறளில் இத்தகைய பொருள் ஆழம்காணப்படுகிறது. அதனால்தான் பத்துப் பழமையான ஆசிரியர்கள் அதற்கு உரை எழுதி இருக்கிறார்கள். பொருள் ஆழமில்லாத நூலாயிருந்தால், அதற்கு ஒரே ஓர் உரைதான் எழுத இயலும். ஒன்றுக்கு மேற்பட்ட உரைகளுக்கு அது இடம் கொடுக்காது.

ஒரே ஒரு நூல் அதை அணுகுபவனுடைய மனப் பண்புக்குத் தக்கவாறு பொருள் கொடுக்கிறது என்னும்போது, மக்களின் பல்வேறு வகைப்பட்ட மனப் பண்புகளைக் கருத்தில் கொண்டே அந்த நூல் ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

கீதை அவ்வாறு ஆக்கப்பட்ட ஒரு நூலேதான். அதிலுள்ள எழுநூறு செய்யுள்களின் உட்கருத்தையும் நுணுகி நோக்குவோர்க்கு, இந்த உண்மை புலப்படாமல் போகாது.

மனித உள்ளத்தின் பண்புகள் எண்ணற்றவை. ஒவ்வொரு மனிதனும், தனக்கென்று ஒரு தனிப்பட்ட இயல்பை உடையவனாகவே விளங்குகிறான். எனவே, உலகில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ, அத்தனை இயல்புகளும் அவர்களிடத்தே காணப்படுகின்றன. எனினும், அந்த இயல்புகளை மூன்று பெரும் பகுப்புகளாகப் பிரித்துப் பேசுவது நம் முன்னோர்கள் மரபு. அந்த மூன்று பெரும் பிரிவுகளுக்குள், உலகிலுள்ள எல்லா ஆண்களும் பெண்களும் அடங்கிவிடுகிறார்கள். இப்பிரிவுகளைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உகந்த முறையில், பகவத் கீதை இயற்றப்பட்டுள்ளது.

சில மனிதர்கள் எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு செயலைச் செய்துகொண்டே இருப்பார்கள். அவர்களால் சற்று நேரம்கூடச் சும்மா இருக்கமுடியாது. எந்நேரமும் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பதிலேயே அவர்

கள் இன்பம் காண்கிறார்கள். இது ஒரு பிரிவு.

சிலர் இருக்கிறார்கள். அவர்கள் எதையும் நன்கு சிந்தித்துப் பார்க்கும் திறனுடையவர்களாய் விளங்குகிறார்கள். நுணுக்கமான பொருள்களை எடுத்துக்கொண்டு, அவற்றை ஆழமாகச் சிந்திப்பதிலேயே அவர்கள் ஆனந்தம் அடைகிறார்கள். இது இரண்டாவது பிரிவு.

எதிலும் சட்டென்று உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள் சில பேர்கள். அவர்களின் உள்ளம் அவ்வளவு மென்மையானதாக இருக்கும். உணர்ச்சியால் தன்னுணர்வின்மை அடையும் இயல்புடைய இவர்கள் மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இந்த மூன்று பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் நல்வழி காட்டுகிறது பகவத்கீதை. அவரவர்களுக்கு உரிய அந்த அந்த வழிகளில் செல்லும்போது, அவர்களால்அடையப்படத்தக்கஇறுதியான குறிக்கோள் என்ன? அதாவது, பகவத்கீதையைப் படித்துப் பின்பற்றுவதால் மனிதன் அடையக் கூடிய பயன் என்ன?

நம் உடம்பினுள்ளே உள்ளம் இருக்கிறது. உள்ளத்தின் உள்ளே உயிர்இருக்கிறதுஅந்த உயிருக்கும் உயிராய் இறைவன் இருக்கிறார். அதாவது நம் எல்லாருக்குள்ளேயும் இறைவன் உறைகின்றார். அந்த இறைவனை பிரம்மம் என்ற பெயரால் குறிப்பிடுகிறது பகவத்கீதை.

நம் ஒவ்வொருவருக்குள்ளேயும் பிரம்மம் இருந்தாலும், அந்தப் பிரம்மத்தை நம்மால் அறிய முடிவதில்லை. காரணம், நம் உள்ளத்திலுள்ள மாசுகள் பிரம்மத்தை மறைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த மறைப்புக்களை விலக்கிவிட்டு உள்ளே இருக்கும் பிரம்மத்தை நாம் என்றைக்கு அறிகிறோமோ, அன்றைக்கு நாமே பிரம்மம் ஆகி விடுகிறோம். பிரம்மத்தைஅறிந்தவன் பிரம்மமாகவே ஆகிவிடுகிறான் என்பது மறை முடிபாகிய உபநிடதம் அளித்த உறுதி மொழி.

நமக்குள்ளே இருக்கும் பிரம்மத்தை நாம் அறியும்போது நாமே கடவுளாகி விடுகிறோம் என்றால், இதைவிட நாம் அடையக்கூடிய ஒரு மேலான நிலை வேறு ஏதாவது இருக்கமுடியுமா? இந்த உயரிய நிலையை நாம் அடைவதற்கு நமக்கு வழி காட்டியாக விளங்குகிற கலை ஒன்று உண்டு. அந்தக் கலைக்குப் பிரம்ம வித்தை என்று பெயர்.

பகவத் கீதை நமக்கு அந்த வழியைக் காட்டுவதனால், அதற்குப் பிரம்மவித்தை என்ற பெயரும் வழங்கிவருகிறது.

எனவே, நமக்குள்ளே இருக்கும் கடவுளைக் கண்டு, நாமும் அந்தக் கடவுளாகவே ஆகிவிடுவதுதான், பகவத்கீதையால் நாம் பெறத்தக்க பெரும் பேறு ஆகும்.

இந்தப் பேறு, நாம் இறந்த பிறகு இவ்வுலகத்தை விட்டு வேறு எவ்வுலகத்திலேயோபோய் அடையப்படுவது என்று எண்ண வேண்டாம், அது இந்த உலகத்திலேயே, இந்தப் பிறவியிலேயே, இப்போதே நாம் அடையக் கூடியது. அதை எப்படி அடைவது என்பதுதான் கீதை காட்டும் பாதை.

திருச்சிற்றம்பலம்

வான்மாறினு மொழிமாருத மாறன்
மனங் களிக்கக்
கான்மாறி யாடிய
கற்பகமே நின்கருணை யென்மேல்
தான்மாறினும்விட்டு நான்
மாறி டேன் பெற்ற தாய்க்கு முலைப்
பான் மாறினும்
பிள்ளைப்பான் மாறுமோ
அதிற் பல்லிடுமே.

ஊர்தரு வார்நல்ல ஆண்தரு
வார்உடையும் தருவார்
பார்தரு வார்உழற் கேர்தரு
வார்பொன் பணம்தருவார்
சோர்தரு வாருள்ளறிவு
கெடாமற் சுகிப்பதற் கிங்கு
ஆர்தரு வாரம்மையார் தருபாகனை
யன்றி நெஞ்சே.

—திருவருட்பா

உலகப் பற்றும் உயரிய நிலையும்



ஸ்ரீ இராமகிருஷ்ண
பரமஹம்ஸர்

உலகப் பற்றுடையவன் வெறும் பொய் வேஷக்காரன். கடவுளை நேசிப்பவன் போன்று அவன் பாசாங்கு பண்ணுகிருன். உண்மையில் உலகப்பொருள்களி டத்துத்தான் அவன் பற்றுதல் வைத்திருக்கிருன்.

மாறுகண் படைத்திருந்த பண்க்காரன் ஒருவன் ஒரு தடவை இங்கு வந்து பேசலாயி னன். ''தாம் ஒரு பரமஹம்ஸர். அது மிக நன்று. எனக்கு நீங் கள் சுவாஸ்தியாயனக் கிரியை ஒன்று செய்துவைக்க வேண்டும்'' என்ருன். ஒரு மனிதனுக்கு வரக்கூடிய தீமையை அகற்றுதற் கான கிரியை அது. யோகசித்தி பெற்றிருந்தால்தான் ஒருவன் அக் கிரியையைச் செய்யமுடியும். ஆனல் அது போன்ற கிரியை செய்கின்றவனுக்கு சாதனத்தில் முன்னேற்றம் இல்லை. பரமஹம் ஸன் ஒருவனை இத்தகைய செய லுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று அம்மனிதன் கருதினன், பாவம்!

புரு ஒன்று உலர்ந்த தானி யங்களைக் கொத்தி விழுங்கு கிறது. ஆனல் அத் தானியங் கள் இன்னும் புருவின் உடல் மயமாகவில்லை யென்பது இரைப் பையைத் தொட்டுப்பார்த்தால் தெரியும். அங்ஙனம் உலகத்த வன் ஒருவன் ஒரு சாதுவிடம் வருகிறபொழுது, தனது உலக இயல்புகளை யெல்லாம் மறைத்து வைத்து விட்டு நல்லுபதேசத்தை ஏற்றுக்கொள்பவன் போன்று தென்படுகிருன். சாது முன் னிலையினின்று அப்புறம் சென்ற தும், அவ்வியல்புகள் பழையபடி முன்னணியில் வந்து நிற்கின்றன.

தானியத்தைக் களஞ்சியத் தின் முகடு வரையில் வியாபாரி

கள் முட்டை மூட்டையாக அடுக்கிவைக்கின்றனர். பிறகு அதைச் சுற்றிலும் பாகில் தோய்த்த, பொரியை ஏராள மாகத் தூவி விடுகின்றனர். எலி கள் அப் பொரியைத்தின்று திருப் தியடைகின்றன; தானியத்துக் குப் பக்கத்தில் வருவதில்லை. உல கத்தவர் போக்கு அத்தகையதே. உலக போகங்கள் அவர்களுக்கு வேண்டியவாறு வழங்கப்பட்டி ருக்கின்றன. அவர்களும் அப் போகங்களில் திருப்தியடைந்த வர்களாகக் காலத்தைக் கழிக் கின்றனர். கடவுளிடத்திருந்து வரும் பேரானந்தத்தைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரி யாது.

உலக மக்கள் லௌகிக விஷயங்களில் அளவுக்கு மீறி முன் திட்டம்போட்டு எதிர் காலத்தில் ஊதியம் பெறுதற்கு உழைக்கின்றனர். ஆத்மசாத கன் ஒருவன் அம்முறையில் லௌகிக உணர்வில் ஊறிக்கிடக் கலாகாது.

உலகப் பற்றுடையவர்களிடம் அவர்களுடைய சொத்து சுதந் தரங்களைப்பற்றி சிலாகித்துப் பேசினால் பரம திருப்தி உண்டா கிறது. ஆதலால், கடவுளுடைய சிருஷ்டிகளையெல்லாம்பற்றிசிலா கித்துப் பேசினால் கடவுளுக்குப் பரமதிருப்தி உண்டாய்விடும் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால்நமது நிழலை நாம் பொருட் படுத்தாதிருப்பது போன்று தனது சிருஷ்டியை ஈசன் பொருட்படுத்துவதில்லை.

மக்களில் பெரும்பான்மை யோர் ஒரு பூந்தோட்டத்தின் அழகைக் கண்டு ரசிக்கின்றனர். அத்தோட்டத்தை உருவாக்கிய வனைப்பற்றி அவர்கள் ஒன்றும் நினைப்பதில்லை. அதே விதத்தில், இப்பிரபஞ்சம் என்னும் தோட் டத்தை மக்கள் கண்டு களித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கு ஆதிமூலமாயிருக்கும்இறைவனைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. உலகுக்கு முதற் காரணமாகிய இறைவனை அடைவதுதான் மானுடப்பிறவியின் குறிக்கோள். தோட்டத்தை ரசிப்பதோடு நின்றுவிடுவதல்ல.

ஒரு கோட்டைக்குள் நாம் வண்டியில் போகும் பொழுது சமதரையில் போவது போன்று தெரிகிறது. உள்ளே போயான பிறகுதான் தரை மட்டத்துக்கு மிகக் கீழே போய்விட்டோம் என் பது தெரியவருகிறது. ஒருவன் துன்மார்க்கத்தில் பிரவேசிக்கும் பொழுது அவனுடைய வீழ்ச்சி அவனுக்கு புலப்படுவதில்லை. முற் றிலும் கீழ்மையடைந்தான பிறகே எத்தகைய பரிதாபகர மான நிலைக்கு அவன் வந்திருக் கிறான் என்பது அவனுக்கே விளங் கும்.

ஒருவன் தன் பாயைச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு தெருக்கூத்துப் பார்க் கப்போனான். கூத்துத் துவங்கு வதற்கு இன்னும் சிறிது நேரம் ஆகும் என்று அறியவந்தான். ஆதலால் அங்கே பாயை விரித் துப் படுத்தான். அவன் எழுந்து பார்த்தபொழுது கூத்து முடிந்து விட்டது. பாயைச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான். உலக வாழ்வு என்னும் நாடகத்தில் அனுபவம் பெற இவ்வையகத் துள் வந்திருக்கிறவர்களில் சிலர் ஓரனுபவமும் பெறாது வந்த படியே மறுபிறப்பெடுக்கப் போகின்றனர். சுருட்டி எடுத் துச் சென்ற பாய் அம்மனிதனு டைய கர்மம்.

அறிஞன் யார்?



புத்தர் பெருமான்

பொன்மொழிகள்

மனிதர்களில் அறிவுக் கண் உள்ளவனே சிறந்தவன்.

அதிகமாகப் பேசுவதினுல் மட்டும் ஒருவன் அறிஞனல்ல.

முட்டாள் தன் முட்டாள் தனத்தை உணர்வானேயாகில், அந்த அளவிற்கு அவன் அறிவாளி! ஆனல் தன்னைப் பாண்டித்தியமுள்ள அறிஞனுக எண்ணிக் கொள்பவனே அடி முட்டாளாவான்!

உன்னை ஒரு தற்காப்புத் தீவாகத் தயாரித்துக் கொள்; விரைவில் முயற்சி செய்; அறிஞனுய் இரு.

அறிவாளிகள் எதன் மீதும் இச்சை வைப்பதில்லை; இன்பங்களை விரும்பிக் கூச்சலிடுவதில்லை: சுகமோ, துக்கமோ எது வந்தாலும் எழுச்சி யடைவதுமில்லை.

அம்பை நேராக நிமிர்த்துபவர்கள் வில்லாளிகள்! மரத்தில் (சித்திரங்கள்) பொறிப்பவர் தச்சர்கள்! தம்மைத் தாமே அடக்கியாள்பவர் அறிஞர்கள்!

அறிவாளி இருண்ட மார்க்கத்தை நீக்கி, ஒளி மயமான மார்க்கத்தில் செல்வானுக.

நாக்குக்கு குழம்பின் சுவை தெரியும். அதுபோல கருத்துள்ளவன் அற்ப நேரமே அறிஞரோடு பழகினுலும் அறவழியின் தன்மையை அறிந்து கொண்டு விடுகிருன்.

அகப்பைக்குக் குழம்பின் சுவை தெரியாது. அதுபோல, மூடனொருவன் வாழ்நாளெல்லாம் அறிஞரோடு பழகினுலும், அறத்தை அவன் அறிவதில்லை.

அறிவாளி ஒருவன் தன்னை விழிப்புற்றெழச் செய்வதனுலும், கருத்து முயற்சியினுலும், தன்னடக்கத்தினுலும், ஒழுக்கத்தினுலும், தன்னை எந்த வெள்ளத்தாலும் மூழ்கடிக்க முடியாத ஒரு தீவு ஆக்கிக் கொள்ளலாம்.

முட்டாள்கள் சோம்பேறித் தனத்தின் வெறும் மனப்பிரமைகளையும், தீய அறிவு படைத்தவர்களையும் பின்பற்றுகிருர்கள். அறிவாளியோ, தன்னுடைய கருத்து முயற்சியையே தன்னுடைய அதி உன்னதமான இரத்தினம்போல் பாதுகாத்து வருகிருன்.

கற்றுத் தேர்ந்த அறிவாளி ஒருவன், தன் கருத்து முயற்சியினுல் சோம்பேறித் தனத்தின் வெறும் பிரமைகளை விரட்டித் தள்ளி விட்டு, அறிவு எனும் கோபுரத்தின் உச்சி மீது ஏறி நிற்கும் போது, கீழே உள்ள முட்டாள்களைப் பார்க்கிருன். கீழே சமவெளியில் ஆருக் கவலைகளுடன் பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஜனக் கும்பலை மலை உச்சி மீது ஏறி நிற்பவன் அமைதியாகப் பார்ப்பது போலவே, அவன் மற்றவர்களைப் பார்க்கிருன்.



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

பகவான் இரமணரும் கணபதி முனிவரும்



கி. ரா.

நம்முடைய நாட்டுத் தெய்விகப் புராணங்களுடைய வரலாற்றுக் கதைகளைக் கொண்டு, வாழ்க்கையை அந்தக் கதைகளில் கூறப்பட்டுள்ள வழியிலேயே வாழ்ந்து நிலைபெற்றுள்ள செல்வர்களில் திரு கணபதி சாஸ்திரி என்ற செல்வரும் ஒருவராவர்.

கணபதி சாஸ்திரி இளம் வயதிலேயே சமஸ்கிருத மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து, பன்னிரண்டு வயதில் தன்னுடைய சுய கவிதைகளைக் கூறி, தேவியை வழிபட்டுள்ள பெருங் கவிஞராவர்.

சிறு வயது முதலே கணபதிக்கு ஒருபெரும் தாபம் எண்ணத்தில் நிலைபெற்று இருந்தது. நம்முடைய காவியங்களில் கூறப்பட்டுள்ளதைப்போல், சிவனைக் குறித்துத் தவம் இயற்றி, சிவ தரிசனம் பெற்று, வேண்டிய வரத்தைப் பெற்று, பண்டைய ரிஷிகளைப் போல் உலகோருக்கு நன்மை செய்து வாழ வேண்டும் என்று அவர் விரும்பினர். அந்த வழியில், தன்னுடைய இருபதாவது வயது முதல் சுமார் பதினைந்து வருஷங்கள் சிவ ஜெபம் செய்துவிட்டு, தன்னுடைய எண்ணம் நிறைவேருமல் திருவண்ணமலை வந்து சேர்ந்தார்.

கணபதி சாஸ்திரியைப் போல் சரஸ்வதி தேவியின் திருவருளைக் குறைவின்றிப் பெற்றுள்ள செல்வர்கள், நம்முடையநாட்டில் பல பேர் வாழ்ந்துள்ளார்கள். ஆனல் கணபதியைப் போல் நாட்டுப்

பற்றும், பெருந் தெய்விக ரிஷிகளைப் போன்ற தொண்டு செய்யும் பேராவலும், ஒருங்கே இணைந்துள்ள எவரையும் கண்டது இல்லை. கணபதி சாஸ்திரிபோல் பெரும்புகழைப் பெற்றுள்ள கவிஞர்கள், எப்போதும் பொருள் ஈட்டுவதையே குறிக்கோளாய்க் கொண்டு வாழ்வார்கள். இந்தச் செல்வரோ எனில், நம்முடைய நாட்டுப் பெரியோராய் வாழ்ந்து, எத்தனையோ தெய்விக நூல்களைக் கூறியுள்ள ரிஷிகளைப் பின்பற்றி வாழ்வதற்கு ஆசை கொண்டு, அந்த விதமே வாழ்ந்தார். திருவருட் செல்வருடைய காவியப் பண்பையும், கற்பனைக்கு எட்டாத கவிதைச் சிறப்பையும் கண்டு, பெரும் பண்டிதர்கள் ''காவிய கண்ட கணபதி சாஸ்திரி'' என்று கூறிப் புகழ்ந்தார்கள்.

காவிய கண்ட கணபதி தன்னுடைய இருபது வயதுமுதல் தேடிய சத்குருவை தன்னுடைய முப்பத்தைந்தாவது வயதில் சந்தித்து, தான் வேண்டிய உபதேசத்தைப் பெற்றார். அந்த சத்குருவே நம்முடைய இரமணர்.

கணபதி சாஸ்திரி தேடி அலைந்த அந்த மெய்ப்பொருள் எது? அந்தப் பொருளை மகரிஷி இரமணர் எவ்வாறு அறிந்தார்? இந்தக் கேள்விகளுக்கு கணபதி சாஸ்திரி அவர்களுடைய மொழியைக் கொண்டே விடையைப் பெறுவோம்.

''என்னுடைய வாழ்க்கையில் நான் கல்லாத வேதம் இல்லை. உபநிஷதங்களைப்பெற்று, தத்துவங்களைக் கற்று, எண்ணத்தை நிலைநிறுத்தி உள்ளேன். எண்ணற்ற தெய்விக மந்திரங்களைக் கொண்டு எத்தனையோ கோடி ஜெபங்கள் செய்துள்ளேன். ஆனால் என்னுடைய வாழ்க்கையின் லட்சியத்தைப் பெறும் வழியை அறியாமல் தவித்தேன். என்னுடைய அதிருஷ்டலக்ஷ்மி இரமணமகரிஷி என்ற திரு வடிவத்தைத் தாங்கி, திருவண்ணாமலை நகரில் வீற்றிருந்ததை அறியாமல் இத்தனை காலம் சுற்றித் தேடி அலைந்து சோர்ந்தேன். அந்தத் திருவருள் செல்வருடைய அருள் வடிவைக் கண்டவர்கள், சாந்தியைப் பெற்று விளங்குவார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. அந்த தெய்விகச் செல்வருடைய திருவாய் மொழியே வேதங்களுடைய தத்துவங்களாகும். இந்தப் புண்ணிய மூர்த்தி காட்டிய வழியே, வேத வியாசர், வசிஷ்டர், விச்வாமித்திரர் போன்ற பிரம்ம ரிஷிகள் காட்டியுள்ள வழியாகும். என்னுடைய எண்ணத்தில் தெளிவையும், இணையற்ற சாந்தியையும் பெறுவதற்கு வழி காட்டிய செல்வரை, இனி நாம் பகவான் ரமண மகரிஷி என்று கூறுவதே சரியாகும்.''

இந்த விதம் கூறி, காவிய கண்ட கணபதி சாஸ்திரி தன்னுடைய வாழ்க்கையை நிறைவாய் வாழ்ந்து, நிலைபெற்று, தான் பெற்ற பேரின்பத்தை எல்லோரும் பெற்று வாழவேண்டும் என்று எண்ணி, தம்முடைய அனுபவத்தைக் கொண்டு ஒரு தெளிவான வடமொழி நூலை இயற்றியுள்ளார். அந்த நூலே ''ரமண கீதை'' யாகும்.

நானே கடவுள்

நானே கடவுள். கடவுளே நான்தான்.

என் அறிவில் தெய்வத்தன்மை காணப்படுகிறது. நான் ஒரு தேவனைப் போல சிந்தனை செய்ய வல்லேன். இனி என் செய்கைகளிலும் தெய்வத்தன்மை விளங்குதற்குரிய வழி செய்ய வேண்டும்.

தெய்வம் என்னுள் எப்போதும் வந்து பொழிந்து கொண்டிருக்கும்படி என்னைத் திறந்து வைத்திருக்கிறேன்.

எனக்கு உலகம் எனது சித்தமேயாதலால், என் சித்தம் எனக்கு வசப்படும்போது உலகம் எனக்கு வசமாய் விடும்.

நாழிகைகள் கழிக. நாட்கள் ஒழிக. பருவங்கள் மாறுக. ஆண்டுகள் செல்க. நான் மாறுபட மாட்டேன். நான் எக்காலமும் உறுதியாகவும், ஸ்திரமாகவும் இருப்பேன்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சித்தம், இவற்றோடிருப்பேன்.

இயன்றவரை தமிழே பேசுவேன். தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்.

—பாரதியார்

உடல் உழைப்பே இறைவழிபாடு



மகாத்மா காந்தி

நேர்மையாக ஒரு பைசா சம்பாதிக்க விரும்புவோர், எந்த வேலையையும் இழிவாகக் கருத மாட்டார்கள். ஆனால் ஆண்டவன் தமக்குத் தந்துள்ள கை கால்களைப் பயன்படுத்துவதற்குத் தயாராக இருப்பார்கள்.

உணவுக்காக உழைக்கும் நோக்கத்தோடுதான் மனிதனை இறைவன் படைத்தான்.

நெற்றி வியர்வை சிந்தி நாம் உணவு தேடிக்கொள்ள வேண்டும் என்றுதான் இயற்கை வலியுறுத்துகிறது. ஆதலால் ஒரு வினாடி சோம்பலுடன் செயலற்று இருந்தால், அந்த அளவுக்கு ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குச் சுமையாக இருப்பார்கள். இப்படிச் செய்வது அஹிம்சை முறைக்கு முரணானதாகும்.

அஹிம்சை என்றால் மற்றவர்கள் நலனில் அக்கறை காட்டி அதைப் பாதுகாப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். செயலற்று இருப்பவர்கள் இதை மீறுகிறார்கள்.

நமது வாழ்நாளில் மிக அதிகமான நேரத்தை நாம் உணவு தேடிக் கொள்வதற்காகத்தான் செலவிடுகிறோம். ஆதலால் உழைப்பின் கௌரவத்தைப் பற்றி குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே அறிவுறுத்தவேண்டும். இதுதான் என் கருத்து. உழைப்பை வெறுக்குமாறு நமது குழந்தைகளுக்கு ஒரு போதும் சொல்லிக்கொடுக்கக் கூடாது.

ஏழைகள் என்ன வேலை செய்ய வேண்டுமோ, அந்த வேலையை நாம் அனைவரும் நாள்தோறும் ஒரு மணி நேரமாவது செய்து ஏழைகளுடன் நம்மை ஒன்று படுத்திக்கொள்ள வேண்டும். இப்படித்தான் மனிதகுலத்துடன் நம்மை ஒன்று படுத்திக்கொள்ள முடியும். இதைவிடச் சிறந்த ஒரு வழி கிடையாது. இதை விடச் சிறந்த தேசியவாதமும் கிடையாது. ஆண்டவன் பெயரைச் சொல்லி ஏழைகளது வேலையைச் செய்வதை விடச் சிறந்த இறை வழிபாடும் கிடையாது

விவேகமான முறையில் பயனுள்ள உடல் உழைப்பு இருந்தால், அதுதான் அறிவை வளர்ப்பதற்கு மிகச் சிறந்த வழி. உடலும், உள்ளமும், ஆத்மாவும் இசைந்து வளர்ந்தால் தான் சிறந்த அறிவு உருவாக முடியும். சமூகத்துக்கு பயன்தரக்கூடிய உழைப்பின் மூலம் வளரும் அறிவினால், மக்களுக்கு மேலும் பலன் கிடைக்கும். அது தவறான வழிகளில் செல்லாது.

நாம் உடல் உழைப்புக்கு மேலும் கௌரவம் கொடுக்க வேண்டும். உடல் உழைப்பு ஓர் அவமானச் சின்னமாகும் என்ற கருத்தை அகற்ற வேண்டும்.

திருமூலரும்

அத்வைதமும்



ஸ்ரீகாமகோடி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

வேதாந்தத்தின் கருத்தை விசேஷமாக விளக்கியிருப்பவர், சைவத் திருமுறைகளுள் ஒன்ருன திரு மந்திரத்தைப் பாடிய திருமூல நாயனர்.

திருமுறைகளுள் இவருக்கும் இவருடைய நூலுக்கும் சிறப்பு என்னவென்ருல், —

இந்தத் திருமூலர் பதினெண் சித்தர்களிலும் ஒருவர்; அறுபத்து மூன்று நாயன்மார்களிலும் ஒருவர். இவரைத் தவிர்ந்த இதர நாயன்மார்களுக்குச் சித்தர் கணக்கில் இடமில்லை. இவ்வாறு, இவ்விரண்டு சிறப்பும் பெற்றவர் இவரொருவரே. சிறந்த ஆசிரியர் எழுதியதாகையால், நூலும் சிறந்த ஆதாரமாயிருக்கிறது.

மேலும், திரு மந்திரத்தைத் தவிர மீதியுள்ள திருமுறை நூல்கள் தோத்திரங்களாக மட்டும் இருக்கின்றன. திருமுறைகளிற் சேராத இதர சைவ நூல்கள் சாத்திரங்களாக மாத்திரம்இருக்கின்றன. இந்தத் திரு மந்திரம் மட்டும்,தோத்திரமாகவும் இருக்கிறது; சாத்திரமாகவும் இருக்கிறது; திருமுறையாகவும் இருக்கிறது. அதனலேதான், 'திருமந்திரம்' திருமுறைகளுள்ளும் சிறந்த ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது.

'திருமந்திர'த்தில் வேதாந்த தத்துவத்தை விளக்கும் பாடல்கள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. அவற்றுள் சில இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

1. வேதாந்தங் கண்டோர்
பிரம்மமித் தியாதரர்

நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற
யோகிகள்

வேதாந்த மல்லாத சித்தாந்தங்
கண்டுள்ளோர்

சாதாரணமன்னசைவருபாயமே.

(பிரம்ம — மித்தியா—தரர்—

'பிரம்மஸத்யம்; ஜகந்மித்யா' என்பது வேதாந்தத் துணிபு. இவ்விரு தத்துவங்களை விளக்கவே, இவ்விரு பதங்களையும் நாயனுர் குறிப்பாகக் காட்டியிருக்கிறுர்.)

இவ்விரு தத்துவங்களை ஸதாதாரணை செய்பவர்களே "வேதாந்தங் கண்டோர்" என்றவாறு. இறுதியில் இருக்கும் "உபாயமே" என்னும் சொல் "அடையும் வழி" என்னும் பொருளைக் குறிக்கும்.

2. வேட்கைவிடுநெறி வேதாந்த
மாதலால்
வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச்
சித்தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி
பாதமே
தாழ்க்கும் தலையிஞேன்
சற்சீடனுமே.

(வாழ்க்கைப் புனல் வழி மாற்றி — ஸம்ஸார நிலையில் வெளி நோக்கிச் செல்லும் 'அறிவு' என்னும் பிரவாஹத்தின் போக்கை ஆன்மாவிடம் செல்லும்படி திருப்பி)

3. வேதாந்தந்தன்னிலுபாதிமே
லேழ்விட
நாதாந்த பாசம் விடும்; நல்ல
தொம்பதம்
மீதாந்த காரணோ பாதியேழ்
மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி
யென்பவே.

இப்பாட்டு 'தத்' என்னும் பதமும் 'த்வம்' என்னும் பதமும் 'அஸி' என்னும் பதமும் அடங்கிய வேதாந்த மஹா வாக்கியத்தின் பொருளை விரித்துக் கூறுவது. ஜீவனுடைய ஸ்வரூபத்தை மூடிக் கொண்டிருக்கும் உபாதிகளும், ஈசனுடைய ஸ்வரூபத்தை மூடிக்கொண்டிருக்கும் உபாதிகளும், 'அஸி' என்னும் சொல் விளங்குங்கால் போய் விடுகின்றன.

4. தொந்தத் தசிமூன்றில்
தொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றில் தொல்தா
மதமாதி
வந்த மலங்குண மாளச் சிவன்
தோன்றின்
இந்துவின் முன்இருள் ஏகுதல்
ஒக்குமே

(தொந்தத்தசி—த்வம், தத், அசி — நீ அதுவாய் இருக்கிறுய்)

பூர்ணச்சந்திரன் தோன்றியவுடன் இருள் நாசமடைவது போல், ஞானியின்முன் மலமாயை நாசமடைகின்றது. ஆதலால், அம்மாயை அநித்யம் என்பது அத்வைதக் கொள்கை.

5. ஆகிய வச்சோயந் தேவதத்
தன்னிடத்
தாகிய வைவிட்டாற் காயமு
பாதானம்

ஏகிய தொந்தத் தசியென்ப
மெய்யறி

வாகிய சீவன் பரசிவ னுமே.

'ஸோயம் தேவதத்த:' என்னும் வாக்கியம், தர்க்க சாஸ்திரத்தில், ''அன்று அங்குக் காணப்பட்ட தேவதத்தனே, இன்று இங்குக் காணப்படுகிறான்'' என்ற பொருளில் திருஷ்டாந்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. அன்று, அங்கு என்னும் அடைமொழிகளையும், இன்று, இங்கு என்னும் அடைமொழிகளையும் விட்டுவிட்டால், நின்றது ஒன்றும் தேவதத்தனே என்று விளக்கப்பட்டிருக்கிறது. இதைத் திருமூல நாயனார் இங்கு உதாரணமாகக் காட்டி, ''த்வம், தத், அஸி'' என்னும் வேதாந்த மஹா வாக்கியத்திலும், த்வம் (நீ) என்னும் பதத்தின் பொருளில் அடையாகவுள்ள கட்டுண்டிருக்கும் ஜீவத் தன்மையையும், தத் (ஈசன்) என்னும் பதத்தின் பொருளில் அடையாகவுள்ள தன்னினும் வேறாக உலகத்தைப் படைக்கும் ஈசத்தன்மையையும், உண்மையறிந்துகொண்டு விட்டுவிட, மெய்யறிவாகிய சீவன் பரமசிவனுமே என்ற சுத்தமான அத்வைதப் பொருளை இந்தப் பாட்டில் விளக்கியிருக்கிறார்.

திருச்சிற்றம்பலம்

தேனென வினிக்குந் திருவருட் கடலே
தெள்ளிய வமுதமே சிவமே
வானென நிற்குந் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
ஊனென நின்ற வுணர்விலே னெனினும்
உன்திருக் கோயில்வந் தடைந்தால்
ஏனெனக் கேளா திருந்தனை யையா
ஈதுநின் திருவருட் கியல்போ.

துங்க வெண்பொடி யணிந்துநின் கோயிற்
றொழும்பு செய்துநின் துணைப்பத மேத்திச்
செங்கண் மாலயன் தேடியுங் காணுச்
செல்வ நின்னருள் சேர்குவ தென்றோ
எங்க ளுள்ளுவந் தூறிய வமுதே
இன்ப மேயிமை யான் மகட் கரசே
திங்கள் தங்கிய சடையுடை மருந்தே
திகழு மொற்றியூர்ச் சிவபெருமானே.

—திருவருட்பா



இறைவன் இருக்கும் இடம்

ஆசார்ய வினோபா

வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்
றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்
சொல்லி வாழ்த்துவனே.

ஆண்டவன் தரிசனத்திற்காக கோவிலுக்குப் போகத் தேவையில்லை. 'ஆகாசம் சரீரம் ப்ரஹ்மம்' என்று கூறப்படுகிறது ஆண்டவனுக்கு ஆகாயமே சிறந்த சரீரமென்று சொல்லப்படுகிறது மாணிக்கவாசகரும் எங்கும் நிறைந்த பரம்பொருளை சொற்களால் வர்ணிக்கப் புகும்போது 'வானாகி மண்ணாகி' என்று வானுக்கே முதலிடம் தந்திருக்கிறார். இவ்வாறு எங்கும் நிறைந்த பரம்பொருளைப்பார்க்க வேண்டுமென்று செல்ல நினைக்கும்போதே அவருடையதரிசனம் கிடைத்து விடுகிறது.

'ஊனாகி உயிராகி' என்றும் பாடியிருக்கிறார். ஆண்டவன் கோயிலிலும் இருக்கிறார். ஆனால் அங்கு மட்டும்தான் அவர் இருக்கிறார் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டதில்லை. கோயிலுக்குப் போன போது நான் யாரைக் கண்டேன்? முதன் முதலாக நால்வரைக் கண்டேன். பிறகு அறுபத்து மூவரைக் கண்டேன். இத்தகைய பக்தர்கள் வந்து சேர்ந்ததால் தான் இந்த இடத்திற்கு இவ்வளவு சிறப்பு ஏற்பட்டிருக்கிறது.

அனைவரிடத்தும் அன்பு

மாணிக்க வாசகர் ஆயிரம் வயதுடையவர். ஆனாலும் அவர் மீது மக்களின் உள்ளத்தில் மங்காத அன்பு இருக்கிறது. ஏனெனில் அவர் தனது உடற்பற்றை விட்டு விட்டார். இந்த உடல் வாழ்வு இழிந்ததென அவர் அறிந்திருந்தார். அதனால்தான் எல்லோருடைய அன்பும் அவருக்குக் கிடைத்தது. தன்மீது மட்டுமே அன்புகொண்டவன்

பிறரது அன்பைக் கவர்வதில்லை. மிருகங்களுக்கு கூட தன்மீது அன்பு இருக்கிறது. பண்டிதனுக்கு உடற்பற்று இருப்பதைப் போன்றே இடையனுக்கும் அவனது ஆட்டுக்கும் இருக்கிறது. ஆகவே இதில் விசேஷமொன்றும் இல்லை. தனது உடலுக்கு அப்பாற்பட்டு உலகம் முழுவதும் அன்பு செலுத்துபவனே குறிப்பிடத்தக்கவன். இதற்காக அவர்களுடைய புகழைப் பாடினால் போதுமா? போதாது. அவர்களின் குணங்களை வாழ்க்கையில் பின்பற்றி வாழ வேண்டும்.

''அவர் பெரிய மனிதர்; அதனால்தான் அவர் அவ்வாறு வாழ்ந்தார்'' என்று நினைக்கக்கூடாது. இங்கு பாமரர்—மகாத்மா என்று யாருமில்லை. நாமனைவரும் கடவுளின் குழந்தைகள். நம் எல்லோருடைய உள்ளத்திலும் சோதியுள்ளது. அதனால் தான் மணிவாசகர் ''சோதியே சுடரே சூழொளி விளக்கே'' எனப் பாடியிருக்கிறார்.

ஆன்ம சோதியே சிறந்தது

கோவிலில் சோதி தரிசனம் பார்த்தேன். ஆனால் இதனினும் சிறந்த சோதி தரிசனம் இரவில் கிடைக்கிறது. உள்ளத்தில் காணும் சோதிக்குக் கொடுக்கும் பெருமையை விட கோவிலில் காணும் சோதி தரிசனத்திற்கு நான் அதிகம் பெருமையைக் கொடுப்பதில்லை. அனைத்தினும் சிறந்தது ஆன்ம சோதியே! மாணிக்கவாசகர் போன்ற பக்தர்கள் அந்த உள்ளொளியையே உபாசித்தார்கள். ஆகையால் தான் அவர் தனது அமைச்சர் பதவியை விட்டு விட்டு கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்கு தொண்டு செய்தார். நானும் அதற்காகவே ஊர் சுற்றுகிறேன்.

காலத்திற்கேற்ப உபாசனை முறையும் மாறுகிறது. இனிமேல் இத்தகைய கோவில்கள் கட்டுவதில் மக்களுக்கு சிரத்தையிராது. இதனால் பக்தி குறையுமா என்றால் அதுவும் குறையாது. ஆனால் பக்தியின் வடிவம் மட்டும் சிறிது மாறும். அத்தகைய மாறுபட்ட உருவை எங்கும் பார்க்கும் சக்தி நமக்கு ஏற்பட வேண்டும். இதைக் குறித்தே ''வானாகி மண்ணாகி...'' என்று மாணிக்க வாசகர் பாடியிருக்கிறார்.

சிலையிலும் உலகிலும் இறைவன்

இதைப்பற்றி நான் திரு. இராமசாமி நாயக்கரிடம் குறிப்பிட்டேன். அவர் ஒருவனே தேவன் என்பதை ஒப்புக் கொள்ளுவதாகக் கூறியதால் நான் மாணிக்க வாசகரின் இந்தக் கருத்தைக் கூறினேன். ''மணிவாசகர் ஒருவனே தேவன் என்பதை ஒப்புக்கொண்டிருக்கலாம். ஆனால் அவர் இதர தேவதைகளையும் ஒப்புக்கொண்டிருக்கின்றாரல்லவா? ஆகவே அவரையும் நான் ஏற்கமாட்டேன்'' என்று அவர் சொல்லிவிட்டார். நூற்றுக்கணக்கான கடவுளர்கள் இருப்பது அவருக்குப் புரியவில்லையாம்? எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் சிலையில் மட்டும் ஏன் இருக்க முடியாது என்பது எனக்கு விளங்கவில்லை. ஆகவே உலகிலுள்ள இறைவன் சிலையிலும், சிலையிலுள்ள இறைவன் உலகிலும் இருக்கிறார் என்பதே நாமறியும் உண்மை.

நம்பிக்கையின் அற்புத சக்தி

கே. ஆர்.

கிருஷ்ணமூர்த்தி பி. ஏ.

எந்த அளவு நமக்குக் கடவுளுடைய காருண்யத்தில் நம்பிக்கை இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் நமக்கு நன்மையும் ஏற்படும். வேதங்களின் உண்மையிலும் சரி, குருவினுடைய ஹிதமான உபதேசத்திலும் சரி, மந்திரங்களின் சக்தியிலும் சரி, தீர்த்தங்களின் மகிமையிலும் சரி, மாகன்களின் தரிசனத்திலும் சரி, மருந்துகளின் குணத்திலும் சரி, எந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் அவைகளும் பலனைக்கொடுக்கும்.

கும்பமேளாவின்போது ஹிந்துக்கள் கங்கையில் ஸ்நானம் செய்வார்கள். இது பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது. அன்றைத் தினம் கங்கையில் ஸ்நானம் செய்பவர்கள் சகல பாவங்களும் நீங்கப் பெற்றவர்களாய், சுவர்க்கத்தையடைகிறார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஒரு சமயம்ஸ்ரீபார்வதிதேவிஸ்ரீ பரமேசுவரனிடம், "இப்போது கும்பமேளா வருகிறதே, நற்பது ஐம்பது லக்ஷம் பேர்கள் கங்கையில் ஸ்நானம் செய்வார்களே, அவர்கள் எல்லோரும் சுவர்க்கத்துக்கு வருவதென்றால் அங்கே இடம் இருக்காதே?" என்றாள்.

உடனேபரமன், தேவியினுடைய காதில் ரகசியமாய் ஒரு திட்டத்தைச் சொன்னார்.

கும்பமேளா நடந்தது. அப்போது கங்கைக் கரையில் ஒரு தொண்டு கிழவர், "லொக்கு லொக்கு" என்று இருமிக்கொண்டே படுத்துக்கொண்டிருந்தார். அவருடைய சமீபத்தில் ஒரு யுவதி தலைவிரி கோலமாய் நின்றுகொண்டே அழுதுகொண்டிருந்தாள். கங்கையில் ஸ்நானம் செய்யப் போனவர்கள் அந்தச் சோகக் காட்சியைக் கண்டு பரிதாபப் பட்டார்கள். கிழவரைப் பார்த்தார்கள். அவர் இறந்து கிடந்தார். அந்தப் பெண்மணி, "என் பர்த்தாவுக்கு இந்தக் கதியாகி விட்டது. இவருக்கு ஸம்ஸ்காரம் செய்யப் பாவமே செய்யாத ஒருவர் வேண்டும்" என்று சொன்னாள்.

அங்கே இருந்தவர்கள் எல்லோரும், தாங்கள் ஏற்கனவே செய்த

பாவங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டு பேசாமல் போய் விட்டார்கள். கடைசியாக ஒரு பிராம்மணர் வந்தார். அவரிடமும் அந்தப் பெண்மணி அதே வார்த்தைகளையே சொன்னாள். ஆனால் அந்தப் பிராம்மணர் மற்றவர்களைப்போல் பேசாமல் போகவில்லை. ''இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லி விட்டுக் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வந்தார்.

''அம்மணி! இன்றைத் தினம் கங்கையில் ஸ்நானம் செய்பவர்களுடைய சகல பாவங்களும் போய்விடும் என்ற புராண வசனத்தில் எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டு. ஆகையால் என்னுடைய சகல பாவங்களும் போய்விட்டன. நான் இப்போது பாவம் நீங்கியவன். நான் இவருக்கு ஸம்ஸ்காரம் செய்ய யோக்யதை யுள்ளவன்'' என்றார்.

உடனே அந்தப் பெண்மணியும் கிழவனாரும் ஸ்ரீ பார்வதிதேவியும் ஸ்ரீ பரமேசுவரனுமாக ரிஷபாரூடராய்க் காட்சியளித்து, அந்த பிராம்மணரைச் சுவர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

நாற்பது லட்சம் பேர் அன்றைத்தினம் கங்கையில் ஸ்நானம் செய்த போதிலும், அதன் மகிமையில் உறுதியான நம்பிக்கையிருந்த ஒருவருக்கே சுவர்க்கம் கிடைத்தது.

நமது கலாச்சாரம்

கலைச்செல்வி இராம. மணிமேகலை

1. கலாச்சாரம் வேறு; நாகரிகம் வேறு

உலகில் உள்ள எல்லா மனிதரிடத்தும், நற்குணங்களும் தீக்குணங்களும் கலந்தே இருக்கின்றன.

அன்பு, அருள், ஈகை, இரக்கம், வாய்மை, பொறுமை இவையெல்லாம் நற்குணங்கள்.

தவறான ஆசைகள், கோபம், கருமித்தனம், செருக்கு, பொறாமை இவையெல்லாம் தீக்குணங்கள்.

இந்த நற்குணங்களும் தீக்குணங்களும், ஒவ்வொருவரிடத்திலும் வெவ்வேறு அளவில் அமைந்திருக்கின்றன. நற்குணங்கள் மிகுதியாகவும் தீக்குணங்கள் குறைவாகவும் இருப்பவர்களை **நல்லவர்கள்** என்கிறோம். தீக்குணங்கள் மிகுதியாகவும் நற்குணங்கள் குறைவாகவும் இருப்பவர்களைத் **தீயவர்கள்** என்கிறோம்.

ஆனால், நல்லவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக நடந்து கொள்வார்கள் என்று எண்ணி விடக்கூடாது. தீயவர்கள்கூட அப்படித்தான்; ஒருவரைப் போலவே இன்னொருவர் இருக்க மாட்டார்.

ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஒரு **தனிப்பட்ட பண்பு** உண்டு. அந்தப் பண்புதான் அவருடைய சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

இந்தத் **தனிப்பட்ட பண்பையே** பகவத் கீதை **ஸ்வபாவம்** என்ற சொல்லால் குறிப்பிடுகிறது. ஸ்வபாவத்தின் விளைவாக எழுகின்ற சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும், **ஸ்வதர்மம்** என்று பெயர்.

பாரதத்திலே வருகிற தருமனுடைய ஸ்வபாவம் **பொறுமை**. துரியோதனனுடைய ஸ்வபாவம் **பொறாமை**. கர்ணனுடைய ஸ்வபாவம் **வள்ளன்மை**. இப்படியே உலகில் உள்ள ஒவ்வோர் ஆணும் பெண்ணும் இயல்பிலேயே தமக்கென்று ஒருதனிப்பட்ட பண்பை உடையவர்களாய் இருக்கிறார்கள்.

தனி மனிதனைப் போலவே, உலகில் உள்ள ஒவ்வொரு தனி நாடும் தனக்கென்று ஒரு பண்பாடு உடையதாக விளங்குகிறது. அந்தப் பண்பாட்டுக்குத்தான் **கலாச்சாரம்** என்று பெயர். ஆங்கிலத்தில் அதைக் 'கல்ச்சர்' (Culture) என்று சொல்லுவார்கள்.

இந்தக் கலாச்சாரம் வேறு; **நாகரிகம்** (Civilization) என்பது முற்றிலும் வேறு. இராமாயண காலத்தில் கங்கை ஆற்றைக் குகனுடைய ஓடத்தில் கடந்து சென்றார் இராமன். நாம் இப்போதுமின்விசைப்படகில் கடந்து செல்கிறோம். அதாவது, வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் **கருவிகளின் தரம்** முன்னேறி யிருக்கிறது. அதற்காக உள்ளப் **பண்பாட்டிலே** நாம் குகனைக் காட்டிலும் அல்லது இராமனைக் காட்டிலும் முன்னேறிவிட்டோம் என்று சொல்ல முடியுமா?

கருவிகளின் தரத்திலே நாம் அடைந்துள்ள முன்னேற்றத்துக்கே **நாகரிகம்** என்று பெயர். இந்த நாகரிகத்துக்கும் கலாச்சாரத்துக்கும் தொடர்பே கிடையாது. ஏனென்றால் கலாச்சாரம் என்பது, ஒரு நாட்டு மக்களின் சிந்தனைகளிலும் செயல்களிலும் வெளிப்பட்டு விளங்குகிற அவர்களது உள்ளப் பண்பாட்டைக் குறிக்கின்ற ஒரு சொல் ஆகும்.


ஒரு நாடு நாகரிகத்தில் பெரிதும் முன்னேறி யிருக்கலாம். அதற்காக அதனுடைய கலாச்சாரத்தை உயர்வுடையது என ஒப்புக்கொள்ள முடியாது. ஆட்சித் திறன், இராணுவ வலிமை, பொருளாதார மேம்பாடு இவையெல்லாம் ஒரு நாட்டு மக்கள் அடைந்துள்ள நாகரிக வளர்ச்சியின் அடையாளங்கள்; கலாச்சார வளர்ச்சியின் அடையாளங்கள் அல்ல.

பண்டைக் காலத்தில் உரோமாபுரிப் பேரரசு நாகரிகத்தில் மிக மேன்மை அடைந்து இருந்தது. ஆனால் கலாச்சாரத்தில் உரோமானியரைக் காட்டிலும் கிரேக்கர்களே மேம்பட்டு விளங்கினார்கள். எனவே, உரோமானியர்கள் கிரேக்கர்களைப் போரில் தோற்கடித்து அவர்களுடைய நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த போதும்கூட, கிரேக்கர்கள் தம்முடைய கலாச்சாரத்தை இழந்துவிட வில்லை. இன்னும் சொல்லப் போனால், கிரேக்கர்களுடையகலாச்சாரத்தை உரோமானியர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

அதாவது, அரசியல் துறையில் கிரேக்கர்கள் உரோமானியர்களுக்கு அடிமையானாலும், கலாச்சாரத் துறையில் உரோமானியர்கள் கிரேக்கர்களுக்கு அடிமையாகிவிட்டார்கள். உரோமானியர்கள் மூலமாக, ஐரோப்பாவில் மட்டும் அன்றி, எகிப்து நாட்டிலும், ஆசியாவில் ஆப்கானிஸ்தானம் வரையிலும்கூட, கிரேக்கர்களின் கலாச்சாரம் பரவலாயிற்று.

(தொடரும்)

தத்துவமும் வேதாந்தமும்



வேலவன்

தத்துவம், வேதாந்தம் என்ற வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்திலேயே நாம் மருண்டு விடுகிறோம். ''அவையெல்லாம் முற்றும் துறந்த முனிவர்களுக்குரிய விஷயங்கள்; நமக்கும் அவற்றிற்கும் சம்பந்தமில்லை!'' என்று எண்ணி ஒதுங்கி விடுகிறோம். குடும்பத்தை விட்டுத் துறவியாக விரும்புகிறவன்தான் தத்துவ நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஒரு தவறான கருத்து வழக்கிலிருந்து வருகிறது. வேதாந்தமும் தத்துவமும்வேலையில்லாத சோம்பேறிகளுக்குரியவை யென்ற அபவாதமும்அந்த உயரிய நூல்களுக்கு உண்டு. ஆனால் இத்தகைய பழிச் சொற்களைக் கூறுகிறவர்கள் எவருமே, அந் நூல்களைப் படித்துப்பார்த்தவர்களா யிருக்கமாட்டார்கள். அவற்றைப் படிக்காமலே, அவற்றின் உட்பொருள் யாது என்பதை உணர்ந்து கொள்ளாமலே, தம் மனம் போனபடி அபிப்ராயம் சொல்வது இன்றைய மரபாயிருக்கிறது. அதனாலேயே, அந் நூல்களால் அடையத்தகுந்த பயனை நம்மால் அடையவியலாமலிருக்கிறது,

வாஸ்தவத்தில், தத்துவ நூல்களால் பெரும் பயனடைதற்கு உரியவர்கள் யார் என்றால், அவர்கள் இளைஞர்களும் இல்லறத்தில் வாழ்வோருமே யாவர்! உலகில் வெற்றிகரமாக வாழ்க்கை நடத்துதற்குள்ள சிறப்பான வழிகள் யாவை என்பதைத் தத்துவ நூல்கள்தான் தெளிவாக எடுத்துரைக்கின்றன. தெய்வத்தினிடத்தே நம்பிக்கையும் பக்தியும் உடையவர்கள் மட்டுமே தத்துவ நூல்களைப் படிக்கலாம் என்பதல்ல. இன்னும் சொல்லப்போனால், கடவுளிடத்தே சிறிதேனும் நம்பிக்கையில்லாத, கடவுளைச் சற்றேனும் ஒப்புக் கொள்ளாத, பரம நாஸ்திகர்களுக்குத்தான் அவை படிப்பதற்கு அதிகச் சுவையளிப்பனவாயிருக்கும். ''அந்தப் புராணம்

அப்படிச் சொல்கிறது; இந்த சாஸ்திரம் இப்படிச் சொல்கிறது; அதனால் இதை நீ நம்ப வேண்டும்!'' என்ற பேச்சே அவற்றில் காணப்படமாட்டாது. ஒரு மனிதன் தன்னுடைய சொந்தமான சிந்தனையைக் கொண்டே ஆராய்ந்து தெளிவடைய வேண்டிய விஷயங்கள் தான் அவற்றில் சொல்லப்பட்டிருக்கும். அந்தச் சிந்தனையை ஊக்குவிக்கும் விதத்தில், அதைச் செம்மையான பாதையில் செலுத்துவிக்கும் வகையில், அந்நூல்கள்எழுதப்பட்டிருக்கும்.

நமக்குத் தெரியாத விஷயங்களைக்கூடக் கண்மூடித்தனமாக உண்மையென்று நம்புவோமாயின், அதற்கு மூட நம்பிக்கை யென்று பெயர். அதே போல, ஒரு விஷயம் நமக்குத் தெரியவில்லை யென்பதற்காக அதைச் சற்றும் ஆராய்ந்து பாராது பொய்யென்று தள்ளி விடுவோமாயின், அதற்கு மூட அவநம்பிக்கை யென்று பெயர். நாம் சில விஷயங்களில் மூடநம்பிக்கை உடையோராய் இருக்கிறோம். வேறு சில விஷயங்களில் மூடஅவநம்பிக்கையுடையோராயிருக்கிறோம். இவ்விரண்டுமே தவறான மனப்பான்மைகள் தான். இவ்விரண்டையும் அகற்றி, நம்மைத் தெளிவான சிந்தனையாளராக்கும் சக்தி தத்துவ நூல்கட்கு மட்டுமே யுள்ளது.

மனிதனுடைய கவலையைப் போக்கும் ஆற்றலும் தத்துவ நூல்களுக்குத்தான் உண்டு. அந்த நூல்கள் எழுதப்பட்டதன் நோக்கமே அதுதான். அந்தக் காலத்தில் வடமொழியிலிருந்து தமிழில் பல நூல்களை மொழி பெயர்த்த பெரியோர்களும் கூட, அதிலுள்ள காதம்பரி, சாகுந்தலம் போன்ற தலைசிறந்த இன்ப இலக்கியங்களையெல்லாம் தமது மொழி பெயர்ப்புக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அவற்றை விட்டுவிட்டு, வடமொழியிலுள்ள தத்துவ நூல்களையும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களையும், சில புராணங்களையும் மட்டுமே அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். காரணம், ஒரு மனிதன் எந்தக் காலத்திலும் மன நிறைவோடு நல்வாழ்வு நடத்தி நற்புகழ் அடைய வேண்டிய வழிகள் அவற்றில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. தத்துவ நூல்கள் தர்க்கரீதியான சிந்தனையால் தெளிவு படுத்தும் அதே விஷயங்களைப் புராண இதிகாசங்கள் சுவைமிக்க கதைகளின் வாயிலாக நமக்கு உணர்த்துகின்றன. இதுதான் இவ்விரண்டுக்குமுள்ள வேறுபாடு.

ஆனால் நாம் இப்போதுபுராண இதிகாசங்களையும் படிப்பதில்லை. ''இவையெல்லாம் பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாத வெறும் கட்டுக்கதைகள். இவற்றைப் படிப்பதால் நமக்கு மூடநம்பிக்கைகள் வளருமேயன்றி அறிவு வளர்ச்சி ஏற்படமாட்டாது!'' என்று நாம் எள்ளி நகையாடித் தள்ளிவிடுகிறோம். ஓர் அருமையான வேர்ப் பலாக்கனியை விலைக்கு வாங்கினவன், அதன் முள் நிறைந்த மேல் தோலை மட்டும் கடித்துத் தின்று பார்த்து விட்டு, அந்தப் பலாப்பழத்தின் மீதே வெறுப்படைந்து அதைத் தூர எறிந்துவிட்டானாம். நாம் புராண இதிகாசங்களை இகழ்ந்து தள்ளுவதும் இதுபோன்ற ஒரு செயலேயன்றி வேறல்ல. பலாப் பழத்தின் உள்ளேயுள்ள இனிய சுளைகளைப் பாதுகாப்பதற்காக, வெளியேயுள்ள ஒரு முரட்டுத் தோலால் அது போர்த்தப்பட்டிருக்கிறது. அதுபோல, புராண இதிகாசங்களில் பொதிந்து கிட

கும் நுண்ணிய உண்மைகளைத் தன் அறிவில் வாங்குவதற்கேற்ற பரிபக்குவம் ஒருவனுக்கு இருக்கிறதா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக, அதன் மேற்பரப்பில் வேண்டுமென்றே சில முடிச்சுக்கள் போடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, வாலியை இராமன் மறைந்து நின்று அம்பெய்து கொன்ற சம்பவத்தையே எடுத்துக் கொள்வோம். இது இராமனுடைய இயல்புக்கே இழுக்கை விளைவிப்பதாகும் என்பது அந்த வால்மீகிக்கும் கம்பருக்கும் தெரியாதா, என்ன? அது அவர்கட்கு நிச்சயம் தெரியும். தெரிந்திருந்தும், அவர்கள் வேண்டுமென்றே அம்மாதிரி ஒரு முடிச்சை அங்கு போட்டு வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முடிச்சுக்களை இராமாயணத்தில் மட்டுமல்ல, எல்லா இதிகாச புராணங்களிலும் பரக்கக் காணலாம். அவற்றை அவிழ்த்துப் பார்ப்பதற்கு நல்ல ஆற்றல்வேண்டும். அது இல்லாமையால், அவற்றின் மீது நாம் வெறுப்பு அல்லது அருவருப்பு அடைகிறோம். இதனால் அந்த நூல்களையே, அவை இக்காலத்து முற்போக்கு உள்ளங்களுக்கு ஏற்றதல்லவென்று நாம் இகழ்ந்து ஒதுக்கி விடுகிறோம். அதன் விளைவாக, உள்ளேயிருக்கும் தேன்சுளைகளின் இன்சுவை நமக்குக் கிட்டாமல் போய்விடுகிறது. அந்தச் சுளைகளிலுள்ள தேன் சொட்டுக்கள் ஒவ்வொன்றும், இந்த உலகியல் நெறியிலேயே நாம் எவ்விதக் கவலையுமின்றி எப்போதும் மகிழ்ச்சிகரமாக வாழ்க்கை நடத்துவதற்குரிய வழிகாட்டிகளாக விளங்கும் உயரிய கருத்துக்களாகும்.

பக்தனும் பரமனும்

கடவுள் கைலையங் கிரியிலோ ஸ்ரீவைகுண்டத்திலோ இருக்கும் போது அவருக்குப் பெருமையில்லை. புகழில்லை. இந்த மண்ணுலகில் பிறந்து ஜீவாத்மாக்களின் பாபங்களை போக்க வழி சொல்லுவதாலும், மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று தானே நடித்துக் காட்டுவதாலுமே அவருக்குப் பெருமை ஏற்படுகிறது.

பகவானை விரோதியாக பாவிக்கும் அசுரகுலத்தில் தோன்றியவன் பிரகலாதன். அவனுடைய தந்தையாகிய ஹிரண்ய கசிபு மூவுலகங்களையும் ஜயிப்பதற்காக தவம் செய்யப் போனான். அப்போது அவன் மனைவி கயாது பூர்ண கர்ப்பிணி. அவளுக்கு நாரதமகரிஷி அஷ்டாக்ஷர மஹா மந்திரத்தை உபதேசிக்க, அதைக்கருவிலேயிருந்த குழந்தை பிரகலாதன் கேட்டு, கருவிலே திருவுடையான் ஆனான். அஷ்டாக்ஷர மஹா மந்திரத்தின் தேவதை ஸ்ரீமந் நாராயணனாதலால், பிறக்கும்போதே பிரகலாதன் பகவத் பக்தியுடனே பிறந்தான்.

இரணியனோ பிரம்மதேவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து, இரவிலோ, பகலிலோ, வானிலோ, பூமியிலோ, தேவராலோ, மனிதராலோ, மிருகத்தாலோ, வீட்டின் உட்புறத்திலோ, வெளிபுறத்திலோ, தனக்கு எந்த ஆயுதத்தாலும் மரணம் வரக்கூடாதென வரம் பெற்றான். பெற்ற வரத்தின் பலத்தால் மூவுலகத்தையும் வென்று அனைவரையும் அடக்கி ஆட்டிவைத்தான். அவனை எப்படி வெல்லுவது என்றறியாது தவித்தனர் தேவர்கள்.



ஜெயலட்சுமிநரசிம்மன்

பக்திமானுகிய பிரகலாதனே குலகுரு சொல்லிக்கொடுத்தபடி ஹிரண்யாய நம: என்று தன் தந்தையின் நாமத்தைக் கூருது, பரமபாவனமான நாராயண நாமத்தையே கூறினுன். அந்த நாமத்தின் பெருமையை திரு மங்கை நாடாண்ட பரகால னென்னும் திருமங்கை யாழ்வார் பல பாடல்களால் விரிவாகக் கூறியிருக்கிருர். அவற்றுள்,

> 'குலந்தரும் செல்வம் தந் திடும் அடியார் படுதுயராயின எல்லாம், நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும் அரு ளொடு பெருநிலம் அளிக்கும், வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயிலும் ஆயின செய் யும், நலம்தரும் சொல்லே நான் கண்டு கொண்டேன் நாராயணு என்னும் நாமம்'

என்ற பாடலும் ஒன்று.

சத்துருவின் பெயரும் புகழும் பாடியதால் தனயன் மேல் கோபம் கொண்ட இரணியன், மகனுக்கு எவ்வளவோ புத்தி சொல்லிப் பார்த்தான். மகன் கேட்கவில்லை. அதன்மேல் அந்த மகனேக் கொன்றுவிட எண்ணி யானேயை விட்டு மோதச் சொன் னுன். ஆனுல் பகவான் அரு ளால் யானேயின் தந்தம்தான் ஒடிந்தது. யானே பிரகலாதனேக் கண்டு மிரண்டு ஓடியது. மலே மேலிருந்து தள்ளச் சொன்னுன். ஆனுல் எம்பெருமான் தானே கீழிருந்து குழந்தையைத் தாங் கிக்கொண்டார். நெருப்பில் தள்ளச் சொன்னுன். பக்தனுக்கு அக்கினியும் சந்தன குழம்புபோல் குளிர்ச்சியாயிருந்தது. பாம்பு களே விட்டு கடிக்கச் சொன்னுன். கடித்த பாம்புதான் இறந்தது. பிரக்லாதன் இறக்கவில்லே.

இரணியனுக்கோ ஆத்திரம் அதிகமாகியது. பெற்ற அன்னே யின் கையாலேயே, பிரகலாத னுக்குக் கொடிய விஷத்தைக் கொடுக்கச் சொன்னுன். எத்தனே கொடுமை! அப்போதும் கூட 'ஐயோ! இந்த விஷம் பட்டு என் இருதய கமலத்திலிருக்கிற எம் பெருமானுக்கு எதுவும் நேரக் கூடாதே!' என்றுதான் கவலேப் பட்டான் அப்பரம பக்தன். ஆனுல் விஷமோ அவனுக்கு அமிர் தம்போல் இனித்தது. பக வானின் நாமத்தைச் சொன்ன படியேநின்றுன் சிறுவன்.

இரணியனுக்குச் சீற்றம் தாங்க முடியவில்லே. ''நீ கூறும் அப்பர மன் நாராயணன் எங்கு உள் ளான்?'' என்று கேட்டான் அவன்.

''தந்தையே பகவானேப்பற்றி பேசும்போது, உபநிஷத்தானது 'அந்தர் பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:' என்று சொல்லுகிறது. அனுதி யான வேதவாக்யம் பொய்யா காது. அவன் எங்கும் உள் ளான்'' என்றுன் பிரகலாதன்.

> ''சாணிலும் உளன் ஓர் தன்மை அணுவினேச் சத கூறிட்ட, கோணிலும் உளன் மாமேருக் குன்றிலும் உளன் இந்நின்ற, தூணிலும் உளன் நீ சொன்ன சொல்லிலும் உளன் இத்தன்மை, காணுதி விரை வின் என்றுன் நன்று எனக் கன கன் நக்கான்''

என்கிருர் கம்பர்.

அதைக்கேட்ட இரணியன் ஆத்திரத்துடன் தன் எதிரிலுள்ள தூணே அறைந்தான். உடனே தூண் பெருஞ் சப்தத்துடன்பிளந்

தது. அண்டமெல்லாம் அதிரச் சிரித்தபடி அதிலிருந்து நரசிங்க மூர்த்தி வெளிப்பட்டார்.


''நசைதிறந்து இலங்கப் பொங்கி நன்று நன்று என்ன நக்கு, விசை திறந் துருமு வீழ்ந்ததென்ன ஓர் தூணின் வென்றி, இசைதிறந் துயர்ந்த கையால் எற்றினன் எற்ற லோடும், திசை திறந்தண் டம்கீறிச் சிரித்தது செங்கட் சீயம்,''

என்ற கம்பராமாயணச் செய்யுள் இக்காட்சியையே வர்ணிக்கிறது.

அப்போதும் இரணியன் புத்தி திருந்தாது அவருடன் போரிட்டான். முடிவில் சிங்கபிரான் அந்த இரணியனை அவன் வரம் கேட்டதற்கு மாறுபடாமல் வாசற்படியில் தன் மடிமேல் படுக்கவைத்து, நகங்களால் கிழித்து சாயங்கால வேளையில் சம்மாரம் செய்தார்.

பக்தனுக்காக பகவான் எத்தனை மனமிரங்கி அருள் புரிகிறார் என்பதற்கு, பிரகலாத சரித்திரமே ஒரு சான்று. அப்பெருமான் தன் கையாலேயே பிரகலாதனுக்கு முடி சூட்டி வைத்தார். அது மட்டுமன்றி, பிரகலாதனுடைய மரபில் இனிமேல் வரப்போகிற எவரையும்தான் கொல்வதில்லை என்றும் வாக்குக் கொடுத்தார்! என்னே அந்த இறைவன் கருணை!

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டி பஸார், தியாகராயநகர், சென்னை-17.


வாரியார் இதழ்
ஆசிரியர்: திருமதி தமிழ்வாணன்
அருள்
15 - 3 - 69
கீலக - பங்குனி
விலை: 30 காசு

அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

இந்த இதழ்

உலகு எங்கும் உள்ள தமிழ்ப் பெருமக்களின் உள்ளங்களிலே, வேறு எவருக்கும் கிடைக்காத ஒரு தனியிடத்தைப் பெற்று வாழும் பெரியார் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்.

அண்மையில் அவர்களுக்கு நேர்ந்த ஓர் இன்னலைக்கேட்டு, நல்லோர் எனப்படும் எல்லோரது இதயங்களும் புண்பட்டுத் துடித்தன.

அவர்களது பரிவிலே பங்குகொள்ளும் வகையில், நமது "அருள்" பத்திரிகையின் இந்த இதழ், முற்றிலும் வாரியாரவர்களைப்பற்றிய செய்திகளையே தாங்கிய

திருமுருக கிருபானந்தவாரியார் இதழ்

என்ற வடிவில் வெளிவருகிறது.

ஆகையால், வழக்கமாக வெளியிடப்படுகிற தொடர் கட்டுரைகளும் பிற கட்டுரைகளும், இந்த இதழில் இடம் பெறவில்லை.

அடுத்த இதழிலிருந்து அவை வழக்கம்போல் வெளியிடப்படும் என்பதை, அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

அருள் 3	ஆண்டுச்	மார்ச்
கருணை 6	சந்தா :	15-3-69
பங்குனி, கீலக	ரூ.3.60	விலை: 30 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி: நிர்வாகி, "அருள்" 4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை—17



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
ஸ்டூடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாருத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

தலையங்கம்

வாரியாரும் அரசியலும்

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும், அன்னார் வழிபட்டு வரும் தெய்வ விக்ரகங்களும் நெய்வேலியில் தாக்கப்பட்ட நிகழ்ச்சி, தமிழ்கூறும் நல்லுலகத்துக்கே ஒரு பெரிய தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

திரு. வாரியார் அவர்கள் காலஞ்சென்ற தமிழக முதலமைச்சரைப் பற்றிக் கிண்டலாகப் பேசியது உண்மையா, பொய்யா?

அவர் அப்படிப் பேசியிருந்தால், அது சரியா, தவறா?

பேசியது தவறாக இருந்தால், அதற்காக அவரை அடித்தது நியாயமா, நியாயம் இல்லையா?

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகும் அவர் தம்முடைய சமயச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமா, அல்லது விட்டுவிட வேண்டுமா?

அப்படியே நடத்தினாலும், அந்தச் சொற்பொழிவுகளில் அவர் தமது வழக்கமான நகைச்சுவைப் பாணியையே தொடர்ந்து கையாண்டு வருவாரா, அல்லது அந்தப் பாணியையே மாற்றிக் கொள்வாரா?

இவை போன்ற பலப் பல கேள்விகள் பொதுமக்களிடையே இப்போது பரவலாக விமர்சிக்கப்படுகின்றன. எனவே, இவற்றை நாமும் விமர்சித்து ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

முதலாவதாக, தமது நெய்வேலிச் சொற்பொழிவில் காலஞ்சென்ற முதல் அமைச்சரைக் கிண்டல் செய்யும் நோக்கத்துடன் தாம் அந்த வார்த்தைகளைப் பேசவில்லை என்று வலியுறுத்திக் கூறுகிறார் திரு. வாரியாரவர்கள். உண்மையில் அவர் அப்படிக் கூற வேண்டிய அவசியமே கிடையாது. ஏனென்றால், கிண்டல் செய்வது, கேலி பண்ணுவது, குத்தலாகப் பேசுவது, நகைச்சுவையாகப் பேசுவது இவையெல்லாம் பேச்சுக் கலைக்கும் எழுத்துக் கலைக்கும் அழகு ஊட்டுகிற அம்சங்கள். தமிழ் இலக்கண நூலோர் இவற்றை **அணி**கள் என்று சொல்வார்கள். வடநூலோர் **அலங்காரங்கள்** என்பார்கள். ஆங்கிலத்தில் Figures of Speech என்று குறிப்பிடுவார்கள்.

ஆனால், அணியிலக்கணமும் அலங்கார சாஸ்திரமும் கற்றவர்களா அன்று கலாட்டா செய்தவர்கள்? அல்லவே அல்ல. ஆகையால், அவர்கள் மேற்கொண்டு கலகம் விளைக்காமல் இருப்பதற்காக, வாரியார் தாம் எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் கிண்டல் செய்யும் நோக்கத்தில் பேசவில்லையென்று கூறியதாக வைத்துக் கொள்வோம்.

ஆனால், அமைச்சர் திரு மாதவன் அவர்களைப் போன்ற படிப் பாளிகளுக்குக் கூடவா அணியிலக்கணம் தெரியாது? அந்த இலக் கணத்தை அவர்கள் தமிழிலும் வடமொழியிலும் கற்றிராவிட்டா லும், ஆங்கிலத்திலாவது கற்றிருக்க வேண்டுமே? வாரியாரவர்கள் கிண்டல் செய்தது தவறு என்ற பாணியில் அவர்கள் கூடப் பேசி யிருப்பதைப் பார்க்கும்போதுதான், அரசியல் பற்றுனது அறிவுக் கண்களை எந்த அளவுக்கு மறைத்து விடுகிறது என்பது நமக்குத் தெளிவாகிறது.

கிண்டல் செய்யக் கூடாது என்று ஒருவருக்குத் தடை விதிப்ப தானது, அவரைச் சிரிக்கக் கூடாது என்று தடை விதிப்பதற்கு நிகராகும். குழந்தைகள் பேதைத்தனமாக நடந்து கொள்ளும் போது, பெரியவர்கள் சிரிக்கிறுர்கள். அதைக் கண்டு புத்திசாலிக் குழந்தைகள் தம் தவறை உணர்ந்து நாணம் அடையும்; தாமும் சிரிக்கும். ஆனுல் அசட்டுக் குழந்தைகள் அப்படியல்ல. அவை தம் தவறை உணர மாட்டா. அதற்குப் பதிலாக, சிரித்தவர்கள் மீது அவை கோபித்துக்கொண்டு அழத் தொடங்கும்.

நன்கு கல்வி பயின்று, அனுபவம் பெற்று, ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள்கூட அத்தகைய அசட்டுக் குழந்தை போல் நடந்து கொள்வது உண்டு என்பதற்கு, பாரதக் கதையில் வரும் துரியோதனனே ஒரு சரியான எடுத்துக்காட்டு ஆகும்.

பாண்டவர்களுடைய இராஜ சூய யாகத்தின்போது, துரியோ தனன் சிறிது பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டான். அதைக் கண்டு திரௌபதி சிரித்தாள். உடனே துரியோதனனுக்குக் கோபம் வந்துவிட்டது. ஆனுல் அதை அப்போதைக்கு வெளிக் காட்டிக் கொள்ளாமல், பிற்பாடு அவளைச் சபையில் கொண்டு வந்து நிறுத்தித் தன் தம்பியை விட்டுத் துகிலுரியச் செய்து வஞ்சம் தீர்த் துக் கொண்டான் துரியோதனன். திரு. வாரியார் அவர்களுக்கும் கிட்டத்தட்ட அதே போன்ற ஒரு கதிதான் நேர்ந்திருக்கிறது,

திரு. வாரியாரவர்கள் எப்போதுமே தி. க., தி. மு. க. வின ரின் நாத்திகக் கொள்கைகளை நையாண்டி செய்து பேசுவது வழக் கம். பொதுவாக ஒரு நையாண்டிக்கு இலக்கு ஆகிறவர்கள் உண்மையிலேயே பண்பாடு உடையவர்களாய் இருந்தால், அதை அவர்கள் ஒரு தமாஷாக எடுத்துக்கொண்டு, தாமும் சிரித்து விட்டுப் போவார்கள். அந்த அளவுக்கு அவர்களிடம் ரசிகத்தன்மை இல்லாதிருக்குமானுல், அவர்களுக்குக் கோபம்தான் வரும். தாம் ஏதோ வார்த்தைகளால் தாக்கப்பட்டு விட்டது போல், கிண்டல் பேச்சுக்களால் அவமானப்படுத்தப்பட்டது போல், அவர்கள் ஆத்தி ரம் அடைவார்கள். நெய்வேலியில் அப்படித்தான் சிலர் ஆத்திரம் அடைந்திருக்கிறுர்கள்.

''கிருபானந்தவாரியார் அண்ணுவைத் தாக்கிப் பேசுகிறுர்'' என்று அவர்கள் எண்ணிவிட்டனர். அவர் அண்ணுவையா தாக்கிப் பேசினுர்? அல்லவே அல்ல,

காலஞ் சென்ற அண்ணா அவர்கள் கடுமையான பிராமண எதிர்ப்புப் பிரசாரம் செய்து கொண்டிருந்த காலத்திலேயே, அடிக்கடி ஒன்று கூறுவது உண்டு. ''நான் பார்ப்பனர்களை வெறுக்கவில்லை; பார்ப்பனீயத்தை வெறுக்கிறேன்'' என்பார் அவர். அதேபோல, வாரியார் அவர்களும் நெய்வேலியில் அண்ணாவைக் கருத்தில் கொண்டு பேசவில்லை. அண்ணாவின் கடவுள் மறுப்புக் கொள்கையையே கருத்தில் கொண்டு பேசியிருக்கிறார். அதில் என்ன தவறு?

''என்ன இருந்தாலும், அண்ணாவின் பிரிவால் மக்கள் மனம் நொந்துபோய் இருக்கும் சமயத்தில், வாரியார் அப்படிப் பேசியிருக்கலாமா?'' என்பது அடுத்த கேள்வி. அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் சட்டமன்றத்தில் இதே போன்றுதான் கேட்டிருக்கிறார்கள்.

அப்படியானால், ''அவர் பேசியதில் தவறில்லை, பேசிய **நேரம்**தான் தவறானது'' என்று ஆகிறது. வாதத்துக்காக அதைத் தவறு என்றே வைத்துக் கொண்டாலும்கூட, அந்தத் தவறுக்குத்தான் வாரியார் அவர்கள் அப்போதே, அந்த சபையிலேயே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விட்டார்களே? அதற்கு மேலும் அந்தப் பெரிய மனிதர் வேறு என்ன பிராயச்சித்தம்தான் பண்ணியிருக்க முடியும்?

அண்ணா இறந்தபோது அவருக்காகக் கண்ணீர் விட்டவர்கள் தி. மு. க. வினர் மட்டும்தான் என்பதல்ல. எல்லாப் பொதுமக்களுமே அந்தப் பெருந்துக்கத்தில் பங்கு கொண்டார்கள். நெய்வேலியில் வாரியார் பேசியவை உண்மையிலேயே ஆத்திர மூட்டக் கூடிய வார்த்தைகளாய் இருந்திருந்தால், அன்றைக்கு அந்தச் சபையில் உள்ள எல்லோருமே ஆத்திரம் அடைந்திருப்பார்கள்.

ஆனால், ஒரு சிலரைத் தவிர வேறு எவருமே ஆத்திரம் அடையவில்லை என்னும்போது, ''வாரியார் பேசிய **நேரம்** தவறானது'' என்ற வாதமே அடிபட்டுப் போகிறது.

அது மட்டும் அல்ல. அந்த ஒரு சில ஆத்திரக்காரர்களும், உண்மையிலேயே அண்ணாவுக்காக ஆத்திரம் அடைந்தவர்களாய் இருந்தால், வாரியார் மன்னிப்புக் கேட்டவுடன் தம் ஆத்திரம் தணிந்து அமைதி அடைந்திருப்பார்கள்.

ஆனால் நடந்தது என்ன? இருபத்துநாலு மணி நேரம் கழித்து, ஒரு மாபெரும் கூட்டமே ஒன்று திரண்டு, வாரியாரை வீடேறிப் போய்த் தாக்கியிருக்கிறது. இது திட்டமிட்ட தாக்குதலா? அல்லது, ஆத்திரம் தாங்காமல் நடந்த தாக்குதலா?

ஆத்திரம் தாங்காமல் நடந்த தாக்குதல் என்றால், முதல் நாளே, அந்த சபையிலேயே, வாரியார் பேசிக்கொண்டு இருக்கும் போதே அது நடந்திருக்க வேண்டும். வாரியார் பேசியதை நேருக்கு நேராகக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அவரை மன்னித்துச் சும்மா விட்ட பிறகு, வேறு யார் யாரோ அவரை அடுத்த நாள் போய் அடித்திருக்கிறார்கள். ஆகையால், ''வாரியார் அண்ணாவைக் கிண்ட

லாகப் பேசினர். அதனல் மக்கள் ஆத்திரம் தாங்காமல் அவரை அடித்துவிட்டார்கள்'' என்று எண்ணுவதற்கு இல்லை. வாரியாருடைய வழக்கமான கிண்டல் பேச்சுக்களை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு, அவரைப் பிடிக்காத கூட்டம் ஒன்று வேண்டுமென்றே திட்டமிட்டுத் தாக்கியிருக்கிறது.

அந்தக் கூட்டம் ஆத்திரம் தாங்காமலே தாக்கியதாக வைத்துக் கொள்வோம். அப்போதும் கூட, பொறுப்புள்ள மந்திரிகள் அந்தக் கூட்டத்தின் செய்கைக்கு அதை ஒரு சமாதானமாகக் கூறக்கூடாது. மந்திரிகளின் கூற்றுக்கள் சட்டத்துக்கு நிகராக மதிக்கப்படவேண்டியவை. அந்தக் கூற்றுக்களை ஆதாரமாகக் காட்டி, நாளைக்கு யார் வேண்டுமானலும் தம் ஆத்திரத்தின் காரணமாக எந்தக் குற்றத்தையும் செய்யத் துணிந்து விடலாம். அல்லது, அப்படித் துணிவதற்கான மனே நிலை நாட்டில் பரவலாக உருவாகிவிடலாம். அது அந்த மந்திரிகளுக்கே நல்லது அல்ல; மக்களுக்கும் நல்லது அல்ல.

மந்திரிகள், தவறு செய்தவர்களுக்குப் பரிந்து பேசுவது போல் சமாதானம் கூறிக்கொண்டிராமல், தம்முடைய கண்டனங்களை ஐயந்திரிபுக்கு இடம் இன்றித் தெரிவித்திருக்கவேண்டும். மந்திரிகள்தான் அப்படிச் செய்யத் தவறிவிட்டார்கள் என்றால், மதிப்புக்குரிய இராஜாஜி போன்ற பெரியவர்களாவது அதைச் செய்திருக்க வேண்டும். அல்லது, நடுநிலையில் உள்ள பத்திரிகைகளாவது தம் கண்டனக் குரலைப் பலமாக எழுப்பியிருக்கவேண்டும். இவர்கள் எல்லோருமே கண்டும் காணததுபோல் ஏனேதானேவென்று இருப்பதைப் பார்க்கும்போது, இந்த நாட்டின் எதிர்காலம் அவ்வளவு மகிழ்ச்சிக்கு உரியதாய் இருக்கும் என்று நமக்குத் தோன்றவில்லை.

அண்ணவின் நாத்திகக் கொள்கைகளை வாரியார் மறைமுகமாகக் கிண்டல் செய்தார் என்பதற்காக, அவரை அடித்துவிட்டார்கள். ஆனல் அண்ணவை நேரடியாகவே பொதுக் கூட்டங்களில் மிக மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசிக்கொண்டிருக்கிற அரசியல் வாதிகளை அவர்கள் என்ன செய்தார்கள்? அந்தப் பேச்சுக்களையெல்லாம் வெறுமே காதைப் பொத்திக்கொண்டு தானே பொறுத்துக்கொண்டு இருக்கிருர்கள்? ஏன் அப்படி?

அரசியல் வாதிகளை அடித்தால் அவர்கள் திருப்பி அடிப்பார்கள். வாரியாரால் அப்படித் திருப்பியடிக்க முடியாது. அதனல் அவரை அடித்துவிட்டார்கள். திருப்பி அடிக்க முடியாத ஒருவரை அடிப்பது வீரம் அல்ல; வடி கட்டிய கோழைத்தனம் அது.

ஆனல், பெரியவர்கள் மீது விழுந்த அடி சும்மா போகாது. பண்டைக் காலத்தில் ஜமதக்கினிமுனிவர் மீது வீழ்ந்த அடிதான் பாரத தேசத்திலே க்ஷத்திரிய வம்சத்தை இருபத்தோரு தலைமுறைகளுக்குக் கருவறுத்து நின்றது. கிருஷ்ண பரமாத்மா ஆட்சி புரிந்த துவாரகாபுரியே, சாதுக்களை அவமதித்ததனல்தான் அழிந்து ஒழிந்தது. இவையெல்லாம் வெறும் புராணக் கதைகள்தாமே என்று சிலர் அலட்சியமாக நினைக்கலாம். புராணக் கதைகள் என்பவை வெறும் பொழுது போக்குக் கதைகள் அல்ல. அவை எக்காலத்துக்

கும் பொருத்தமான (எவராலும் மீறமுடியாத) இயற்கையின் நியதிகளுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குபவை. அந்த நியதி எத்தகையது என்பதைத் திருமூலர் கூறுகிறார் பாருங்கள்:

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே!

ஈசன் அடியார் இதயம் கலங்கிட,
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி ஆணையே!

இறைவனது அடியார்களை மனங்கலங்கச் செய்தவர்கள், தம்முடைய பொருளையும் உயிரையும் ஓராண்டுக்குள் இழந்து விடுவர் என்கிறார் திருமூலர். அது மட்டும் அல்ல. அத்தகையோர் தண்டிக்காமல் விடப்படுவார்களாயின், ஆட்சிபீடத்தில் இருப்பவர் எவ்வளவு பெரிய சக்கரவர்த்தியாய் இருந்தாலும், அல்லது தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனாகவே அவர் இருந்தாலும் கூட, அந்த ஆட்சி நாசம் அடையும் என்று திருமூலர் சாபம் கொடுக்கிறார். ஏனென்றால், தண்டிக்கப்படாத குற்றவாளிகளின் பாவங்கள், ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போரையே போய்ச்சாருகின்றன என்பது, அறநூல்களின் முடிபு.

''ஆன்மீகச் சொற்பொழிவுகளும் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்துகிறவாரியார், அவற்றினிடையே அரசியலை ஏன் மறைமுகமாகக் கலந்து பேச வேண்டும்?'' என்று சிலர் கேட்கிறார்கள்.

இந்த நாட்டிலே அரசியல் பேசுவதற்கு உரிய தகுதிவாய்ந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் கிருபானந்தவாரியாரைப் போன்ற பெரியோர்களே ஆவர். ஏனென்றால், அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். எக்கட்சியிலும் சேராதவர்கள். ஆகையால் விருப்பு வெறுப்பு இன்றி, எல்லா அரசியல் கட்சிகளையும் அவர்களால்தான் விமர்சிக்க முடியும். வாரியார் அவர்கள் அப்படித்தான் விமர்சித்து வந்தார்கள்.

பண்டைக்காலத்தில் வசிஷ்டர் வாமதேவர் போன்ற ஞானிகள்தான் தசரதனுடைய அரசியல் ஆலோசகர்களாக இருந்திருக்கிறார்கள். அசுரர்கள்கூட, சுக்கிராச்சாரியார் என்ற மாமுனிவரைத்தான் தம்முடைய அரசியல் ஆலோசகராகக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் அரசியல் சட்டங்களை இயற்றியவர்களே அத்தகைய முனிவர்கள்தாம். அதிகம் சொல்வானேன்? திருக்குறளின் பொருட்பாலில், நமது திருவள்ளுவரே முழுக்க முழுக்க அரசியலைத்தானே பேசியிருக்கிறார்? திருவள்ளுவர்போன்ற மகாஞானிகளே அரசியல் பேசும்போது, நமது வாரியாரவர்கள் பேசக் கூடாதா?

வாரியார் அவர்கள் தமக்கு நேர்ந்த இன்னல்களை எண்ணி, தம்முடைய பௌராணிகத் துறையிலிருந்து ஓய்வுபெற்று விடக்கூடாது. அவருடைய சமயச் சொற்பொழிவுகள் இனிமேல் தான் நாடு எங்கிலும் மிகத் தீவிரமாக நடைபெற வேண்டும். அந்தச் சொற்பொழிவுகளில் அவர் தமது வழக்கமான நகைச்சுவைப் பாணியையே தொடர்ந்து கையாண்டு வர வேண்டும். விவரம் தெரியாதவர்கள் ஏதோ பேசுகிறார்கள் என்பதற்காக, அவர் தமது பாணியை மாற்றிக் கொண்டுவிடக் கூடாது. வாரியாருக்குப் பின்னால் ஒரு கோடிக்கும் மேற்பட்ட நல்லன்பர்கள் நாடு எங்கிலும் இருக்கிறார்கள். அவர்களால் படையெடுத்து வரவோ, தடியெடுத்துத் தாக்கவோ இயலாமல் இருக்கலாம். ஆனால் ஆயிரம் படைகளையும் பதினாயிரம் தடிகளையும் தவிடு பொடியாக்கவல்ல ஆன்மிகசக்தி அவர்களுக்கு உண்டு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது! ○



பம்பாயில் *13—1—69* ம் தேதி நடைபெற்ற புதிய மர்பி ரேடியோத் தொழிற்சாலைத் திறப்பு விழாவின்போது, ''இந்தியாவின் தலை சிறந்த மர்பி ரேடியோ விற்பனையாளர்'' என்ற சிறப்பு விருதினை, சென்னைப் பன்னீர்தாஸ் சகோதரர்களுக்கு மர்பி அதிபர் லக்கன்பால் அவர்கள் அளிக்கும் காட்சி.

நெய்வேலியில் நடந்தது என்ன?

[நெய்வேலி நிகழ்ச்சிகளை நேரடியாகக் கண்ட அன்பர்களிட மிருந்து, பல கடிதங்கள் வந்துள்ளன. அவற்றுள் இரண்டே இரண்டை மட்டும், பெரிதும் வடிகட்டி இங்கு பிரசுரிக்கிறோம். சரியான முகவரியோ கையெழுத்தோ இல்லாத கடிதங்களைப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். —ஆசிரியர்.]

ஒரு நெய்வேலிவாசி

நெய்வேலி
20-2-69

நான் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு இங்கு நடந்துள்ள ஒரு கொடுஞ்செயலைக் குறித்து எழுதுகிறேன். வார்த்தைகளால் எழுத மனம் கூசும்படியான ஒரு நிகழ்ச்சி. அக்கிரமத்தின் எல்லை மனிதப் பண்பாட்டையே மீறியது......

தவத்திரு கிருபானந்தவாரியார் அவர்கள் இந்த நெய்வேலியில் 17-2-69 முதல் ஐந்து தினங்கள் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர் ஆகிய பெரியார்களைப் பற்றி விரிவுரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டு வந்திருந்தார்கள்...இந்த நிகழ்ச்சி அருள்நெறிச் சங்கத்தின் சார்பில் Neyveli Instituition of Engineers கட்டிடத்தின் இடத்தில் நடைபெற்றது.

வாரியார் அவர்களுக்கு 17-2-69 முதல்நாள் அன்றே உடல்நிலை குன்றியிருந்தது. இருந்தும், அன்றைய நிகழ்ச்சிக்குத் தாமதமாக வந்து, விரிவுரை ஆற்றத் தொடங்கினார்கள். திரளான கூட்டம். வழக்கம் போல் உதாரணங்களுடன், பேச்சு நகைச்சுவை மிதந்தவாறு கூட்டத்தைக் கவர்ந்த வண்ணம் இருந்தது. நடுவே ஒரு இடத்தில் கீழ்க்கண்டவாறு உரையாற்றினார்:

''உயிரை அளிப்பது கடவுள் சக்தி. அதுவே அழிப்பதும் உண்டு. ஆக்கலும் அழித்தலும் அவனது வேலை. இதனிடையே நம்முடைய எண்ணம், செயல் எல்லாம் நல்வழி அமைய வேண்டும்'' என்றுகுறிப்பிட்டு, ''இறப்பைத் தடுக்க யாராலும் முடியாது'' என்று கூறி, ''அமெரிக்காவிலிருந்து டாக்டர்கள் வந்தும், உயிரைத் தடுக்க முடியவில்லை. அதைத் தடுப்பதும் முடியாது'' என்று குறிப்பிட்டார்கள். (பெயரைக் குறிப்பிடவில்லை)

இதைச் சொன்னவுடன் கூட்டத்தில் ஒரு சல சலப்பு ஏற்பட்டது. அதில் ஒருவன் ''வார்த்தைகளை வாபஸ் வாங்க வேண்டும்'' எனக் கூச்சலிட்டான். உடன் பலரும் இரைந்தார்கள். பயந்த பெண் மக்கள் நகர ஆரம்பித்தார்கள். அங்குள்ளோர்கள் நிலைமையை வாரியாரவர்களிடம் சொல்ல, அவர்களும், தான் எந்தப் புண்படும் நோக்கத்துடன் அதைச் சொல்லவில்லையென்றும், ''அப்படியே அவை புண்படுத்துமானல் வார்த்தைகளை வாபஸ் வாங்குகிறேன். மன்னித்து விடும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்றும் கூறினார்கள்.

மறுநாள் 18-2-69செவ்வாய்

பல புல்லுருவிகள் திட்டமிட்டு தி. க., தி. மு. க. கிளைக் கழகத்

தின் உதவியுடன், பழி உணர்ச்சி யுடன், வாரியாரவர்களுக்குத் தீங்கு இழைக்க, காலை முதலே திட்டமிட்டுள்ளனர். இதைப் பலரும் அறிவார்கள் போலும். செய்திகள் 'போலீஸ் இலாகாவுக் கும் Corporation Security Intelligence க்கும்கூட எட்டி யிருக்க வேண்டும்.

பரிதாபம். அருள் நெறிச் சங்க நிர்வாக உறுப்பினர்களுக்குத் தெரியாமல் போய் விட்டது. அவர்கள் வழக்கம்போல் மாலை நிகழ்ச்சியை நடத்த இருந்தார் கள்.

மாலை 6 மணி அளவில் ஒரு பெருங் கூட்டம் அவர்கள் தங்கி யுள்ள விடுதியை நோக்கி வெறி கொண்டு வந்தது. வாரியார் அவர்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டி ருந்த ஒருவர், வாரியாரை வீட் டில் வைத்துக் கதவைப் பூட்டி விட்டு நகர்ந்து சென்று விட் டார். கூட்டம் அவரை நோக்கி ஓடி வந்தது. அவரை வழி மறித்துத் தாக்கி மூச்சுப் போக அடித்தது. அவர் ரோட்டிலேயே மயங்கிக் கிடந்தார். அவரால் அதற்கு மேல் ஒன்றும் செய்ய இயலவில்லை.

கூட்டத்தினர் வாரியாரவர்கள் தங்கியுள்ள வீட்டு நம்பரைக் கேட்டு, அங்கு ஓடினார்கள்.

கூட்டம் அந்த விடுதியை அடைந்து, கதவைத் திறந்து, வாரியாரவர்களைத் தாக்கச் சென் றது. வீட்டினுள்ளே சுமார் 100 பேர்களுக்கு மேல் நுழைந் தார்கள். தி. க., தி. மு. க. கிளை களின் முதல்வர்கள், செயலாளர் கள்......தலைமையில் செயல்கள் தொடங்கின.

வீட்டிலுள்ள பாத்திரங்கள், மத்தளம் முதலியவை அடித்து நொறுக்கப்பட்டன. வாரியார் அவர்களை சுமார் இருபதுக்கு மேல் நபர்கள் கையாலும்...லும் அடித்து, துன்புறுத்தி, கட்டி யிருந்த ஆடைகளை...... (எழுத மனம் கூசுகிறது.) பேசாத ஏச் சுக்களை ஏசி,.........அவர்கள் மூக் கிலிருந்தும் வாயிலிருந்தும் ரத் தம் கொட்ட, வீட்டின் வாசலில் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

வெளியில் இருந்த கூட்டத் திற்கு மன்னிப்புக் கேட்கச் சொன்னார்கள். வாரியார் அவர் கள் கூட்டத்திற்கு விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டார் கள். கூட்டத்தினர் அங்கு கொண்டு வரப்பட்ட அண்ணாத் துரை படத்தின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டு வணங்கச் சொன்னார்கள். வற்புறுத்தி அவர் களிடம் ஒரு ஸ்டேட்மெண்டு எழுதி வாங்கினார்கள்.

தான் இனிமேல் எந்தக் கூட் டத்திலும் அண்ணாத்துரையைப் பற்றி மறைமுகமாகவோ அல் லது நேரடியாகவோ குறிப்பிடு வதில்லை யென்றும், தான் பேசிய பேச்சுக்களை மன்னித்து விடும் படி எல்லோரையும் வணங்கித் தாழ்மையுடன் கெஞ்சிக் கேட் டுக் கொள்வதாயும் எழுதிக் கையொப்பம் வாங்கப்பட்டது. அவர்களோ ''முருகா! முருகா!'' என்று முனகியவாறே மயக்க முற்றார்கள்.

இதற்கிடையில் கூட்டமோ அதிகமாகவும் கட்டுக்கு அடங்கா மலும் கூடிவிட்டது. வாரியார வர்களை வசைமாரி பொழிந்து வீட்டினுள்ளே நுழைய முயன் றது. அந்த நிலைமையில் தி. மு.க. உறுப்பினர் ஒருவர் வெளியில் வந்து, கீழ்க் கண்டவாறு பேசினார்:

''தோழர்களே! வாரியார் என்ற.......யைப் பலம்கொண்ட மட்டும் தாக்கிவிட்டோம். ரத்தம் வழிகிறது. இதற்கு மேல் அடித்தால் அந்த..........இறந்துவிடும். அந்த.........யிடம் வாங்கிய கடிதத்தைப் படிக்கிறேன்'' என்று கூறி, படித்தார். படித்துவிட்டு, ''தோழர்களே கூறுங்கள், நாங்கள் இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்று!'' எனச் சொன்னார்.

கூட்டமோ, ''அவனே அடித்துக் கொல்லு!'' என்றது.

உடனே அவர், ''அது எங்களுக்குத் தெரியும். கூட்டம் உடனே கலைய வேண்டும் என்பது கிளைக் கழகத்தின் ஆணை'' என்று கூறினர்.

அதற்குக் கூட்டம், ''நெய்வேலியில் உள்ள மடங்களுக்கும் சத்சங்கங்களுக்கும் தீ வைக்க வேண்டும்'' என்று முரண்டியது.

அங்கு உடனே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் படி, ''மடங்களிலோ சங்கங்களிலோ இது போன்ற போலிச் சாமிகள் மறைமுகமாகவோ நேரடியாகவோ, கழகத்தையோ அல்லது உறுப்பினர்களையோ குறிப்பிடுமானல், இன்று இந்த............க்கு நடந்த கதை நடக்கும்'' என்றும், ''கட்டடங்கள் தரை மட்டம் ஆக்கப்படும்'' என்றும் தீர்மானம் நிறைவேற்றி பின்பு கூட்டம் கலைந்தது.

இதன் பின்பு இருபது நிமிடங்கள் கழித்து, Security Force லிருந்து ஓர் ஆபீசர் வந்தார். வந்த ஆபீசர், ''என்ன? கைங்கரியங்கள் நடந்து விட்டனவே! இனி என்ன கூட்டம்? செல்லுங்கள். மற்ற காரியத்தை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று கூறி,......சென்று விட்டார்.

மற்றுமொரு நெய்வேலி வாசி

நெய்வேலி
21-2-69

நெய்வேலியில் உள்ள அருள் நெறிச் சங்கத்தினரின் ஆதரவில், கடந்த 17-2-69 அன்றிலிருந்து 22-2-69 வரையில், திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் செஞ் சொல் விரிவுரை (சமயக்குரவர்களைப்பற்றி) இங்குள்ள இஞ்சினீயர் கழகத்தில் நடைபெற இருந்தது.

17-2-69 அன்று இரவு 8-15 மணிக்கு ஆரம்பித்த திரு. வாரியாரின் பிரசங்கம் முடிய இரவு 10-30 இருக்கும். அன்றைய விரிவுரையில் திருஞான சம்பந்தரின் வரலாற்றைப்பற்றிக் கூறி, ''ஆண்டவனல் அல்லாது வேறொருவராலும் நம்மைக் காக்க முடியாது. டாக்டர்களும் ஒன்றும் காப்பாற்ற முடியாது'' என்று கூறினர். கூட்டத்தினர் அதை ஆமோதித்து ரசித்தனர்.

கூட்டத்தில் இருந்த ஒரு சிலர் (ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள்) தமது மறைந்த தலைவர் ஒருவரைக் குறிப்பிடுவதாக

நினைத்து ஆத்திரப்பட்டு, சொல்லொணு வார்த்தைகளால் திரு. வாரியார் அவர்களைப்பற்றிப் பேசிக் கலகம் விளைவித்தனர்.

உடனே திரு. வாரியார் அவர்கள் கூட்டத்தினிடையே தாம் கூறியவை எந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ, தனி நபரையோ குறிப்பிடவல்ல என்று கூறி, மன்னிப்புக்கேட்டுக்கொண்டார். உடனே அவர்கள் கலைந்து சென்றனர்.

18-2-69 அன்று அக் கூட்டத்தினரின் ஒரு சில விஷமிகள், அவர்களின் கட்சிச் சார்பு மன்றங்களுக்கெல்லாம் ஆள்விட்டு அனுப்பி, மாபெரும் கூட்டத்தைச் சேர்த்து, திரு. வாரியார் அவர்கள் தங்கியிருந்த இல்லத்துக்குச் சென்று, திரு. வாரியார் அவர்களைச் சொல்லொணுதவாறு தாக்கியும்......அவருடைய சுவாமி படங்களைக் கொளுத்தியும் சேதப்படுத்தியும், அவரை மிகுந்த அவமானத்துக்கு உள்ளாக்கி, அவரைத் துன்புறுத்தி, வற்புறுத்தி, ஒரு மன்னிப்புக் கடிதம் பெற்றனர்.

பிறகு கூட்டம் நடைபெற இருந்த இடத்துக்கும் சென்று, அங்குள்ள மேடைகளையும் சேதப்படுத்தினர்.........

திரு. வாரியாரைச் சொல்லவே மனம் கூசும் வண்ணம் அடித்தும், அவர்மீது......ஊற்றியும் செய்த செய்கையை எழுதவே மனம் கூசுகிறது.

இக்கடிதத்தை என் கண்ணீருடன் சேர்த்து, ஊரில் உள்ளவர்களின் மனமும் நொந்ததை வெளிப்படுத்தவே எழுதுகிறேன். தயை கூர்ந்து பிரசுரிக்கவும்.

வாரியார் அவர்களின் மறுப்பு


''கடவுள் நம்பிக்கை அண்ணாதுரைக்கு இல்லாததால்தான், அமெரிக்க டாக்டர் மில்லர், மற்றும் ஐம்பதுடாக்டர்கள் பாடுபட்டும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. உள்ளத்தில் பக்தி இல்லை; ஆகவே உடலில் உயிர் இல்லை. ஒரு இரிடியம் ஊசி விலை பதினாறாயிரம், ஒரு பள்ளிக்கூடம் கட்டி இருக்கலாம்'' என்று நான்நெய்வேலி உபந்நியாசத்தில் கூறியதாக தி. மு. க. செயலர் சொல்லுவது முழுப் பொய்.

(நெய்வேலி தி. மு. க. செயலர் பி. வி. சீனுவாசன் வெளியிட்ட அறிக்கை நேற்றைய இதழில் வெளியாகி இருக்கிறது.)

''ஐந்து ஆண்டுகள் ஆளுவோம் என்று நம்பியவர் இரண்டு ஆண்டுகளிலேயே போய் விட்டார்...'' என்று கூறியதாகச் சொல்வதும் வெறும் புரட்டு.

''தில்லை நடராசர் கோயிலில் கொடுக்கப்பட்ட திருநீற்றைத் தூக்கி எறிந்தார்......இப்போது மந்திரி சபையிலிருந்து தூக்கி எறியப்பட்டார்'' என்று நான் ஸ்ரீ நெடுஞ்செழியன்பற்றி சொன்னதாகக் கூறுவதும் சரடுதான்.

(தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஸ்ரீ கருணாநிதி தில்லை விபூதி விவகாரம் பற்றி அண்மையில் குறிப்பிட்டது நினைவிருக்கும். ஸ்ரீ நெடுஞ்செழியன் தாம் விபூதி வாங்கிக்கொள்ளவில்லையென்றும், அப்படி வாங்கியிருந்தாலும் அதைத் தாம் விட்டெறிந்திருக்கப் போவதில்லை யென்றும் அறிக்கை விடுத்திருந்தார்.)



[''நெய்வேலியில் நிகழ்வுற்ற இந்த வருந்தத்தக்க சம்பவத்தைப்பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டதற்கு ஸ்ரீ வாரியார் மனவேதனையுடன் பின் வருமாறு சொன்னார்:

''நெய்வேலி சம்பவம் குறித்து நான் சொல்ல என்ன இருக்கிறது? அதைப்பற்றி இப்போது நான் எதுவுமே நினைக்கவில்லை. அனைத்தையும் ஆண்டவனிடமே ஒப்படைத்துவிட்டேன்.'']

சுதேசமித்திரன் (27-2-69)

வாரியார் பெயரால் வெளி வந்த ஓர் அறிக்கை

நெய்வேலி நிகழ்ச்சிகளுக்கும் அரசியலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இதை அரசியல் கட்

சிகள் தங்கள் நலனுக்காக பயன் படுத்திக் கொள்வதை நான் விரும்பவில்லை.

சட்டமன்றத்தில்முதல் அமைச்சர் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், நல்ல பாதுகாப்பு கொடுக்கப்படுமென்றும் அறிவித்து விட்டபடியால், இதை முடிந்துபோன பிரச்சனையாகக் கருத வேண்டியது,

எனக்கு எப்போதும் எந்தக் கட்டத்திலும் தனிப்பட்ட ஒருவரைச் சுட்டிப் புண்படுத்திப் பேசும் பழக்கம் கிடையாது. நான் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவன்.

—மாலை மணி (28-2-69)

வாரியாரின் மேற்கண்ட அறிக்கை பற்றிய ஒரு செய்தி

வாரியாரைப் போலீஸ் மிரட்டிய கொடுமை !

தன்னைத்தாக்கப்பட்ட சம்பவம் குறித்துக் கட்சிப் பிரச்னையாக ஆக்க வேண்டாம் என்று வாரியார்விட்ட அறிக்கை'முரசொலி' யில் வந்துள்ளது, அந்த அறிக்கையின் மர்மம் இப்பொழுது அம்பலமாகியிருக்கிறது.

வாரியாரைப்போலீஸ் அதிகாரிகள் கட்டாயப்படுத்தி அம்மாதிரி அறிக்கை வெளியிடச் செய்திருப்பதாகத் தெரிகிறது. வாரியார் தாக்கப்பட்ட சம்பவம் தமிழ் நாட்டு மக்களிடையே,குறிப்பாக பக்தி உள்ளம் படைத்தவரிடத்தில், பெரிதும் மன நெகிழ்வை ஏற்படுத்தியதோடு,அரசுமீது ஒருவித அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

இதனால்பீதியடைந்த ஆட்சியாளர்கள், இதற்கு ஒரு முடிவு கட்டத் திட்டமிட்டதாகவும், அதன் எதிரொலிதான் முரசொலியில் வாரியாரின் அறிக்கை என்றும் தெரிகிறது. மதுரையில் தங்கியுள்ள வாரியாரைப் பெரிய போலீஸ் அதிகாரிகள் சந்தித்து, இதுபற்றி இதை ஒரு கட்சிப் பிரச்னையாக ஆக்கவேண்டாம் என்று அறிக்கை வெளியிடும்படி வற்புறுத்தியதாகவும், இல்லை என்றால் கழகத் தோழர்களின் எதிர்ப்புக்கு உள்ளாக நேரிடும் என்றும், இதைத் தடுக்கவே அறிக்கை வெளியிடக் கேட்டதாகவும் கூறப்படுகிறது.

வேறு வழியில்லாமல், நெய்வேலியில் தி. மு. க. வினர் எழுதிக் கொடுத்த அறிக்கையில் நிர்ப்பந்தத்திற்காக கையெழுத்துப் போட்டதுபோல், இந்த அறிக்கையையும் வாரியார் வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிகிறது.

—நவசக்தி (2-3-69)

இந்து மகாசபை என்ன செய்யப்போகிறது?

எம். தம்பு

(செயலாளர், தமிழ்நாடு இந்துமகாசபை)

சென்னை
1-3-69

கிருபானந்தவாரியார்மீது நடந்த தாக்குதலும் 'அதைத் தொடர்ந்து இந்து தெய்வங்களுக்கு இழைக்கப்பட்ட அவமரியாதையும், ஆழமான சஞ்சல உணர்ச்சியைத் தோற்றுவித்திருக்கின்றன. இந்த நியாயமான சஞ்சல உணர்ச்சிபற்றி ஆளும் கட்சியினர் காட்டுகிற அலட்சிய மனப்பான்மையும் கவலையைத் தருவதாக இருக்கிறது. ஆகையால், நாத்திகம் — சமயச்சார்பின்மை இவற்றின் பெயர்களால் நடைபெறும் காலித்தனங்களிலிருந்து இந்துக்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குமாறு அரசாங்கத்தைக் கோருகிற ஓர் இயக்கத்தை மாநில முழுவதிலும் நடத்துவதற்கு, இந்து மகாசபை திட்டமிடுகிறது. ''இந்து பாதுகாப்புதினம்'' ஒன்றை இந்து மகாசபை விரைவில் ஏற்பாடு செய்யும். அன்றைய தினம், இந்த மாநிலம் எங்கும் உள்ள இந்துக்கள், இந்து எதிர்ப்பு, சமயச் சார்பின்மை இவற்றின் அடிப்படையில் நிகழும் திட்டமிட்ட பயமுறுத்தல்களிலிருந்து இந்துமதத்தையும் இந்து மரபுகளையும் பாதுகாப்பதற்கு ஒரு புனிதமான உறுதிமொழி எடுத்துக்கொள்வார்கள்.

—மெயில் *(3-3-69)*

கட்டுரையாளர்களுக்கு

''அருள்'' பத்திரிகையில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்கு மேற்படாதவாறு, தெளிவான கையெழுத்தில், காகிதத்தின் இரு பக்கங்களிலும் எழுதாமல் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியனுப்பப்படுகிற கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. வெளியிட இயலாத கட்டுரைகளைத் திரும்பப் பெற வேண்டுவோர், அவற்றோடு போதிய தபால் ஸ்டாம்புகள் வைத்து அனுப்ப வேண்டும்.

—ஆசிரியர்

உ

திருச்சிற்றம்பலம்

உலகமெலாந் தனிநிறைந்த உண்மை யாகி
யோகியர்தம் அனுபவத்தின் உவப்பாய் என்றும்
கலகமுறு உபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற அருண்ஞானக் காட்கி யாகி
விலகலுறு நிபிட ஆனந்த மாகி
மீதானத்(து) ஒளிர்கின்ற விளக்க மாகி
இலகுபரா பரமாய்ச் சிற்பரமாய், அன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே!

அருளுடைய பரம்பொருளே! மன்றி லாடும்
ஆனந்தப் பெருவாழ்வே! அன்பு ளோர்தம்
தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட
சிவமே! மெய் யறிவுருவாம் தெய்வமே! இம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறேன், என்னை
ஏற்றுவதற் கெண்ணுக,என் இன்பத் தேவே!

—திருவருட்பா

பத்திரிகைகள் கண்டிக்கின்றன

இந்து

......நெய்வேலியில் நேர்ந்தது சட்டத்தின் சீர்குலைவு மட்டும் அல்ல, நம்முடைய கலாச்சார மரபுக்கே இழைக்கப்பட்ட கொடுமை அது. இந்த மரபானது பிறருடைய கருத்துக்களை, குறிப்பாக அரசியல், சமூக, சமய அல்லது பிற துறைகளில் எழுகின்ற மாறுபட்ட கருத்துக்களை, முற்றிலும் பொறுத்துக் கொள்வது என்னும் அடிப்படையில் அமைந்தது ஆகும்.

பிறரை வாய்திறக்காமல் செய்வதற்காக ஒரு கூட்டம் வன்முறையை உபயோகிப்பது என்று முடிவுகட்டிவிட்டால், அல்லது ஒரு கருத்தை வெளியிடத் துணிவதற்கு முன்பாக ஒருவர் தன்னுடைய அக்கம்பக்கங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டியதாக நேரிட்டால், நிச்சயமாக அது ஒரு துக்கமான நாளாகவும் அபாயகரமான நாளாகவும் இருக்கும்.........

—இந்து [26-2-69]

போல் ஸ்டார்

கலாச்சாரத்துறையிலும் சமயத்துறையிலும் பெரு மதிப்புக்கு உரியவராக விளங்கும் திருமுருக கிருபானந்தவாரியார் நெய்வேலியில் தாக்கப்பட்டதாக வந்துள்ள செய்திகள், அந்தப் பௌராணிகரின் இலட்சக்கணக்கான ரசிகர்களுக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளன. பழமையான நூல்களில் உள்ள தமிழ்ச் செய்யுள்களுக்கு விரிவுரை கூறும்போது, அந்த விரிவுரையின் பாஷையானது யாரோ ஓர் அரசியல் தலைவரை அல்லது அவரது சொந்த வாழ்க்கையை மறைமுகமாகக் குறிப்பிடுவதுபோல் தோன்றுகிறது என்பதற்காக, அந்த விரிவுரையாளர்மீதே பாய்ந்து தாக்குவது என்றால், நிச்சயமாக அது தமிழ் நாட்டுக்கே ஒரு துக்கமான, துன்பமான நாள்தான். புராணங்கள் மனித இயல்புகளைப் பிரதிபலிக்கின்ற ஒரு மாபெரும் கண்ணாடி போன்றவை. வாழ்க்கையின் எல்லா அம்சங்களுக்கும் பொருந்தக்கூடிய ஏராளமான எடுத்துக் காட்டுகள் அவற்றில் இருக்கத்தான் செய்யும். அதை வைத்துக் கொண்டு, தங்களுக்குப் பிரியமான ஒரு தலைவரை அல்லது பிரியமான கொள்கைகளைக்குறை கூறிவிட்டதாக எந்தப் பௌராணிகரையும் குற்றம் சாட்டுவது, கழிசடைகளுக்கும் அவர்களின் சதிகாரத் தலைமைக்கும் மிக எளிதான காரியமாகும். போலீசார் அந்தப் புகழ்பெற்ற மேதைக்கு நல்ல வலுவான பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக, திருடனைக் கடத்துவது போல் அவரை இரவோடு இரவாய் ஊரைவிட்டே கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்தது, பரிதாபத்துக்கு உரியதாகும்.

—போல்ஸ்டார் (2-3-69)

சுதேசமித்திரன்

நெய்வேலியில் திருமுருக கிருபானந்த வாரியாரைத் தாக்கியது, எவரோ சிலர், தவருன கருத்துக் காரணமாக, அறியாமல் செய்த பிழை என்றே எண்ணினேம். ஆனல் அது அப்படிப் பட்டதல்ல, திட்டமிட்ட தாக்குதலே என்பது இப்போது தெளிவாகத் தெரிந்துவிட்டது. காமராஜ் கூறியதுபோல, வாரியார் அனுவசியமாக மன்னிப்புக் கோரியதற்குப் பிறகு, முழுசாக ஒரு நாள் கழித்து, அவருடைய முகாம் முற்றுகை யிடப்பட்டதற்காக மட்டும் இவ்விதம் நாம் கூறவில்லை; அவரிடம் எழுதி வாங்கியதோடு நில்லாமல், அங்குள்ள அறநெறி மன்றங்கள் போன்ற ஆஸ்திக நிறுவனங்களைக் கலைக்கு மாறும் ஏற்பாடான ரீதியில் நிர்ப்பந்தம் நடைபெறுவதாக வந்திருக்கும் செய்திகளைப் பார்த்த பின்னரே சொல்கிறோம்.

அவ்வாறெல்லாம் அத்துமீறி நெய்வேலியில் நடந்திருக்கும் நிலையில், மாநிலக் கீழ்ச்சபையில் முதல்வர் கருணுநிதி கூறியிருக்கும் சமாதானம், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தேர்தல் கூட்டுச் சேர்ந்த கட்சிகளுக்குக் கூடத் திருப்திதர இயலாது என்பது தெளிவு. ஏனையோருக்கு எப்படியோ, தமிழரசுக் கழகத் தலைவரான சிவஞான கிராமணியாருக்கு அதிருப்திதான் என்பது அவரது பேச்சிலிருந்து புலப்படுகிறது. நிலைமையை நன்கறிந்த நெய்வேலிப் போலீஸார், உபந்நியாசத்துக்கும் தாக்குதலுக்கு மிடையேயிருந்த ஒரு நாள் பூராவும் போதிய பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்கத் தவறியதேன் என்று அவர் கேட்டிருப்பது பொருத்தமான கேள்விமட்டுமல்ல; விஷயத்தை அறிந்திருந்தும், முதல் முற்றுகையின்போது போலீஸார் வரவேயில்லை என்று வாரியாரே கூறியுள்ள நிலையில், பதில் சொல்ல முடியாதது மாகும்.

ஆயினும், அந்த மாதிரி ஆணித்தரமாக வினவியிருப்பினும், அந்த அருவருக்கத் தகுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட கட்சியுடன் இணைத்துக் குற்றஞ்சாட்டுவது சரியாகாதென கிராமணியார் கூறியுள்ளதை எவரும் ஏற்பதற்கில்லை. எனென்றல், கட்சி ரீதியில்தான் அந்த அநாகரிகம் நடந்திருக்கிறது என்பது பகிரங்க ரகசியம். ஆகையால், வழக்குப் பதிவு செய்தபிறகு ''குற்றம் புரிந்தவர்கள் எவர் என்று கண்டு பிடிக்க முடியவில்லை'' என்பதாக சால்ஜாப்பைச் சொல்லி விசாரணையை முடித்துவிட, இந்த விவகாரத்தில் இடமில்லை. முதலமைச்சர்வாக்களித்திருக்கிறபடி ''தகுந்த நடவடிக்கை'' எடுக்கத் தோது இருக்கிறது. ''வன்முறையில் எவரும் ஈடுபடுவதை அரசு அங்கீகரிக்கவில்லை'' என்று வாயளவில் சொல்வதோடு நின்றுவிடாமல், செயலளவிலும் காட்டுவதற்கு மனமும் துணிவுமே தேவை. இந்த இரண்டும் இல்லையேல், பிசகு புரிந்தவர்களுக்குப் பொருத்தமான பாடம் புகட்ட முடியாது. அப்படிப் போதிக்காவிடில், அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் மிகமிக அவசியமான அமைதி நாளடைவில் நலிந்துவிடும் என்பதை விளக்க வேண்டியதில்லை.

'சுதேசமித்திரன்' (தலையங்கம்)

நவசக்தி

...புதியமுதல்வர் பொறுப்பேற்றுக் கொண்டவுடன்—போலீஸ்

நிர்வாகத்தினைத்தனது மேற்பார்வையில் வைத்துக் கொண்டவுடன்—ஏற்பட்டுள்ள சம்பவம் இது. சட்ட ஒழுங்கு நிலவரம் சரியாகத்தான் இருக்கிறது என்று சட்டசபையில் சமாதானம் சொல்லி விடுவதே பிரச்சினைக்கு பரிகாரமாகிவிடாது.

முதல் தி. மு. க. முதலமைச்சராகத் திரு. அண்ணுத்துரை பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இப்படித்தான் காங்கிரஸ்காரர்கள் பலர் தி. மு. க. வினரின் மிருகத்தனமான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர். போலீஸ் காரர்களும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இப்போது முதலமைச்சராகத் திரு. கருணுநிதி பொறுப்பேற்றுக் கொண்டவுடன், சமயப் பிரச்சாரகர்கள் மீது தாக்குதல் தொடங்கி யிருப்பது போல் தோன்றுகிறது. சட்ட ஒழுங்கினை நிலைநாட்டுவதில் உள்ளபடியே புதிய முதலமைச்சருக்கு அக்கறை இருக்குமாளுல், திரு. கிருபானந்தவாரியார் தாக்கப்பட்டது குறித்து விரிவான அறிக்கை வெளியிட வேண்டும். அந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் யார், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் போன்ற விவரங்களையும் தெரிந்துகொள்ள மக்கள் ஆவலுடையவர்களாக இருக்கிருர்கள்.

உலக நிலையில் மனித உரிமை வகுத்த அட்லாண்டிக் மகாசாசனமே ''வழிபாட்டுச் சுதந்திரம்'' பற்றி உத்தரவாதம் கொடுக்கிறது. லோகாயதம் (Materialism) பேசும்கம்யூனிச நாடுகளிலேகூட, மக்களின் வழிபாட்டுச் சுதந்தரம் மறுக்கப்படவில்லை. அந்த உரிமை அளிக்கப்பட்டிருப்பதை சிறப்

பான அம்சமாகக் குறிப்பிட்டு அந்த நாடுகள் பெருமையடைகின்றன.

பேச்சு, சுதந்தரம், எழுத்து சுதந்தரம், மத சுதந்தரம் அத்தனையும் பூரணமாக அளிக்கப்டுள்ள ஒரு தேசத்தில்—ஆன்மிக உணர்வை வாழ்க்கையின் அஸ்திவாரமாக்கிச்செயல்படும்ஒரு சமுதாயத்தில்—சமய நெறி பரப்பும் பெரியவர்கள் குண்டர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாவதும், அவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பில் தயக்கம் இருப்பதும் கேவலமானது; வன்மையான கண்டனத்துக்கு உரியது.

அண்ணாத்துரையின் பேரால் மூடபக்திவளர்க்கப்படுவதையும், அது வெறி என்கிற நிலைக்கு உருவெடுத்து ''நெய்வேலி நிகழ்ச்சி'' போல் செயல்படுவதையும், எந்த நாகரிக சமுதாயமும் பார்த்துக் கொண்டு சும்மாஇருக்காதுஎனத் தமிழக அரசை எச்சரிக்கிறோம். எதற்கெடுத்தாலும் ''தர்மம்'' பற்றிப் பேசிடும் முதிய தலைவர்கள் இது விஷயத்தில் இதுவரை கண்டனக்குரல் எழுப்பாதது ஏன் என்பதனையும் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

—நவசக்தி (24-2-69)

தினமணி

நெய்வேலியில் திரு. கிருபானந்தவாரியார் சொற்பொழிவைத் தொடர்ந்து, (தப்பெண்ணங்கள் கொண்டவர்களுக்கு அவர் வருத்தம் தெரிவித்த பிறகும்) நடந்த சில காரியங்கள் ஒரு தவறான போக்குக்கு அறிகுறியாகும். இது போன்ற காரியங்கள் நாட்டின் பண்புக்கும், திரு. அண்ணாத்துரை அவர்கள் வற்புறுத்தி வந்துள்ள கொள்கைகளுக்கும் முரணானவை என்பதை, பகிரங்கமாக மட்டுமல்லாமல் **ரகசியமாகவும்** தம் கட்சித் தொண்டர்களுக்கு அல்லது ஆதரவாளர்களுக்கு எடுத்துச் சொல்லுவது, தி. மு. க. தலைமையினரின் முதற் கடமையாகும்; அவசரக் கடமையாகும்; என்பதை வற்புறுத்த விரும்புகிறோம். இது போன்ற கலாட்டாத்தனமான காரியங்கள் நடக்கக் கூடாது என்பதில் கட்சிப் பிரமுகர்கள் அக்கறை கொள்வது இந்த நாட்டின் அரசியல் பண்பு, சமூகப் பண்பு ஆகியவற்றுக்கு மிகவும் முக்கியம்.

—தினமணி (25-2-69)

தமிழ் சினிமா

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பாட்டுப் பாடியே வளர்ந்த தி. மு. க. வினர் அதற்கு நேர் எதிரான வகையிலேயே செயல்பட்டு வருகின்றனர் என்பதற்குப் பல சம்பவங்களை உதாரணமாகக் காட்டலாம்!

அண்ணாத்துரையின் சவத்தின் மீது .... வீசியதும், அரும்பாடுபட்டு அவருக்குச் சிகிச்சை செய்த டாக்டர் சதாசிவத்தின் வீடு தாக்கப்பட்டதும், அவர்களது **'கண்ணியத்'**திற்கு எடுத்துக் காட்டாக சமீபத்தில் நடந்த சம்பவங்களாகும்!

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் ஒருசமயப் பிரச்சாரகர், இலக்கிய விரிவுரையாளர்! அவர், சாவைப்பற்றி விமர்சிக்கும் போது என்ன கூறுவார்? 'அவனன்றி அணுவும் அசையாது' என்றே கூறுவார்! இந்த கருத்தைக்கூட வெளியிட இந்த நாட்டில் **சுதந்திரமில்லையா** என்ன?